விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 11 சனிக்கிழமை (25.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189

# பொது எதிரணியினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

## தள்ளுமுள்ளுகையில் இரு எம்.பிக்கள் படுகாயம்








(கொழும்பு)

நாடாளுமன்ற பொது எதிரணியினரால் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக நேற்றையதினம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது எதிரணியின் ஆதரவா ளர்கள் கலந்து கொண்ட இவ் ஆர்ப்பாட்டத்தின் நெரிசலில் சிக்குண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ‘அரசாங்கத்தை வீழ்த்த இராணுவத்துக்குள் சதி’



(கொழும்பு)

அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக நாட்டுக்குள் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இதற்கு இராணுவத்துக்குள் இருக்கும் பாஸிசவாத கொள்கையுடையவர்களும் துணையாக இருக்கின்றனர். இவர்களை கண்டறிய வேண்டும் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், அரசாங்கம் தொடர்பில்

24ஆம் பக்கம் பார்க்க....

## நாளை மறுதினம் கவனயீர்ப்பு போர்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் வலி வடக்கு காணி விடுவிப்பு மற்றும் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி பல்வேறு சமூக அமைப்புக்களால் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நாளை

23ஆம் பக்கம் பார்க்க....

## போலி நாணயத்தாள்; மூவர் கைதாகினர்

(கரணவாய்)

வங்கியில் போலி நாணயத்தாள்கள் வழங்கப்பட்டதாக பொய் முறைப்பாடு பதிவு செய்த பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டதுடன் போலி நாணயத்தாள்கள் அச்சிட பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாயில் உள்ள தனியார்

23ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சொகுசு வாகன அனுமதிப்பத்திரத்தை தடை செய்யக் கோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொகுசு வாகனங்களை பெற்றுக் கொள்வதற்கு சுங்க வரி நீக்கப்பட்ட வாகன அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை வாங்குவதற்கு சுங்க வரி நீக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுகிறது பிரித்தானியா

### பவுண்சின் மதிப்பு பெரும் வீழ்ச்சி


(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேற வேண்டுமா, இல்லையா என்பதை தீர்மானிக்க நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட கருத்தறியும் வாக்கெடுப்பில் வெளியேறுவதற்கு ஆதரவாக பெரும்பாலான மக்கள் வாக்களித்துள்ளனர்.

இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்புக்கான வாக்குகள் எண்ணும் பணி முடிவுக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஆதரவாக 52 சதவீத

24ஆம் பக்கம் பார்க்க....

## பதவி விலகுகிறார் டேவிட் கமரூன்



(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்று பிரித்தானிய மக்கள் அளித்த தீர்ப்பை

23ஆம் பக்கம் பார்க்க....

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு 10 இலட்சம் ரூபாய் கடன் திட்டம்



### அமைச்சர் எஸ்.பி யாழில் உரை

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் 10 லட்சம் ரூபாய் கடன் வழங்குவதற்குரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சமூக வலுவூட்டல் மற்றும் நலன் புரி அமைச்சர் எஸ்.பி.திசா நாயக்க தெரிவித்துள்ளார்.

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் சமூகவலுவூட்டல் மற்றும்

04ஆம் பக்கம் பார்க்க....

## தகவல் அறியும் சட்டமூலம் ஏகமனதாக நிறைவேற்றம்

(கொழும்பு)

தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீண்டநாள் இழுபறிக்குப் பின்னர் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலகவினால் இந்த சட்டமூலம் கடந்த மாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலம் மீது நேற்று முன்தினமும் நேற்றும் விவாதம் இடம்பெற்றது.

இந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்ததோடு திருத்தங்கள் சமர்ப்பிப்பதற்கும் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

24ஆம் பக்கம் பார்க்க....

# ஆணைக்குழு முன் ரஞ்சித் ஆஜர்



வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் பாரிய நிதி மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுக் காலை ஆஜராகியுள்ளார்.

அரச சொத்துக்கள் மற்றும் சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் வாக்கு மூலம் அளிக்கவே பாரிய நிதி மோசடி விசாரணை ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அவர் வருகை தந்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக எஸ்.எம்.ரஞ்சித் ஏற்கெனவே ஜனாதிபதி ஆணைக் குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# அரியநேத்திரனை அழைக்கிறது சி.ஐ.டி

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவுக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 27ஆம் திகதி விசாரணை ஒன்றிற்காக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவுக்கு விசாரணைக்கு வருமாறு தமது இல்லத்திறகு வந்து பொலிஸார் அழைப்பாணையை வழங்கியதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் எதற்காக அழைத்துள்ளார்கள் என்பது தனக்கு தெரியாது எனவும் கடந்த காலங்களிலும் இது போன்று பல தடவைகள் தன்னை கொழும்பிற்கு விசாரணைக்காக இவர்கள் அழைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார. (செ-12)

# துவிச்சக்கர வண்டியை திருடியவர் பொலிஸாரால் நேற்று கைது

(கரணவாய்)

வடமாராட்சியின் பல பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளைத் திருடிவந்த பிரதான நபரினை மடக்கிப் பிடித்ததுடன் மூன்று துவிச்சக்கர வண்டிகளும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி நுவான் பி.டந்த நாராயணா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு பண்டாரி அம்மன் கோவிலடிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளைஞர் ஒருவர் துவிச்சக்கர வண்டி ஒன்றை விற்பனை செய்துள்ளார்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரின் குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குற்றத்தடுப்பு உதவிப் பரிசோதகர் ஆனந் மற்றும் ரமணன் ஆகியோர் சென்று துவிச்சக்கர வண்டியை மீட்டதுடன் புனித நகரை சோந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் மூன்று பெண்களிற்கான துவிச்சக்கரவண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவர் மேலும் பல துவிச்சக்கரவண்டிகளை திருடியதாக தெரிவிக்கப்படும் நிலையில் அது தொடர்பில் தீவிர விசாரணைகளை பருத்தித்துறை குற்றத்தடுப்பு உதவிப் பரிசோதகர் ஆனந் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)


தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின்
முழு அங்கீகாரம் பெற்ற
யாழ் - கொழும்பு - யாழ்ப்பாணம்
ஈஸ்வரன் எக்ஸ்பிரஸ் பிரயாணிகள் கவனத்திற்கு!

பயணிகளுக்கு பண்ணை பஸ் தரிப்பிடத்தில் ஏற்படும் அசௌகரியங்களையும், இடையூறுகளையும் தவிர்க்கும் முகமாகவும் நேற்று முன்தினம் தொடக்கம் 800 ரூ விசேட கட்டணத்தில் அறவிடப்படுகிறது. ஆகவே தங்களுடைய ஆசனப்பதிவுகளுக்கு தொடர்பு கொள்ள.

69,115 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரில் வந்து முற்பதிவுகளை பதிவு செய்யவும்.




பதிவுகளுக்கான தொலைபேசி இலக்கங்கள்
யாழ் - 0777 806 574
0777 806 573
கொழும்பு - 0777 806 583

Eswarran Traders

நேரில் வந்து பதிவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவும் உண்டு

குறிப்பு :- இடைத்தரகர்களுக்கும், முகவர்களுக்கும் எமது பயணிகள் பேரூந்து நிலையத்தில் ஆசனப்பதிவுகள் இல்லை. இந்த விலைக்கழிவுகள் மறுஅறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும். (சி-5017)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### புகழ் வெளியீட்டாசிரியர் லோ.விஜேந்திரன்

பிரபல வெளியீட்டாசிரியரும் எழுத்தாளருமாகிய **புகழ்** வெளியீட்டகத்தின் ஆசிரியர் திரு.**லோகநாதன் விஜேந்திரன்** அவர்கள் அதிபர் தரம் III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து 17/06/2016 அன்று கல்வியமைச்சர் அவர்களிடம் அதிபர் நியமனம் பெற்றுள்ளமையையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன், இவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற இறைவனை வேண்டி, பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்,**


**லங்கா புத்தகசாலை**
No.F/L/1/1, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12

(5029)

# 31ஆம் நாள் நினைவும், நன்றியும்

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோ. 11 : 25)

31ஆம் நாள் நினைவு | 26ஆம் ஆண்டு நினைவு



அமரர்
**பத்திநாதர் பரிமளபுஸ்பம்**
மண்ணில் பிறப்பு :- 1930.10.06
விண்ணில் பிறப்பு:- 2016.05.27

அமரர்
**ஆசீர்வாதம் பத்திநாதர்**
மண்ணில் பிறப்பு:- 1930.04.21
விண்ணில் பிறப்பு :- 1990.06.15

தவமிருந்து என்னைப் பெற்று, சீராட்டிவளர்த்து உருவாக்கிய எம் கண்கண்ட தெய்வங்களே! வாழ்நாளெல்லாம் உங்களை மறவாது எம் நினைவுகளில் என்றும் தாங்கிச் செல்கின்றோம்

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி சுன்னாகம் புனித. அந்தோனியார் ஆலயத்தில் இன்று 2016.06.25 (சனிக்கிழமை) மு.ப 11.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். இப்பலியில் இணைந்து இவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாறச் செபித்திடவும் நாளை 2016.06.26 (ஞாயிற்றுக்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ள மதிய உபசரணையிலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

வணபிதா யஸ்தஸ்
சின்னப்பு வீதி, சுன்னாகம்.

அன்பு மகன் :- ப.அன்ரன்மரியதாஸ்
குடும்பத்தினர்

(5041)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
பாலசிங்கம் ஜெகன் - (ஆசிரியர்)
(B.B.A, PGDE, M.ED 2nd Upper)

கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் தரம் III பரீட்சையில் சித்தியடைந்தமைக்கான நியமனத்தைப் பெற்ற கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. பாலசிங்கம் ஜெகன் அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்தி அவர் மேன்மேலும் பல பதவிகள் பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

"விஸ்வர்யம்"
கந்தர்மடம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்கள் :
கி. பத்மகாந்தன் (மாமா),
ப. குகமலர் (மாமி),
ப. விஸ்னுசூரியா (மைத்துனன்).

## வெள்ளை வான் கடத்தல் சம்பவங்களை அம்பலப்படுத்திய அதிகாரி பதவியிறக்கம்

(கொழும்பு)

இலங்கை கடற்படையினரின் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பான தகவல்களை அம்பலப்படுத்திய. கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான கொமாண்டர் கே.சி. வெலகெதர. பதவியிறக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவினால் நியமிக்கப்பட்ட இராணுவ நீதிமன்றத்தினால், குற்றவாளியாக காணப்பட்டதையடுத்தே. கொமாண்டர் கே.சி.வெலகெதர பதவியிறக்கப்பட்டுள்ளார்.

கடற்படைத் தலைமையகத்துக்கு . தகவல் தெரிவிக்காமல் வெளிநாடு சென்றார். கடற்படையை இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக. இவர் மீது இராணுவ நீதிமன்றில் விசாரணை நடத்தப்பட்டது.

கடந்த மார்ச் 21 ஆம் ஆம் திகதி தொடக்கம். ஏப்ரல் 13ஆம் திகதி வரை, அனுமதியின்றி விடுமுறையில் இருந்தார் என்பதாலும் இந்தக் காலப்பகுதியில் கடற்படைத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தாமல் வெளிநாடு சென்றார் என்பதா லும். இராணுவ நீதிமன்றம். கொமாண்டர் கே.சி. வெலகெதவின் மூப்பு வரிசையை நான்கு ஆண்டுகளால் குறைத்து. கப்டனாகப் பதவியிறக்கம் செய்துள்ளது.

இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர இதனை உறுதிப்படுத்தியுள்ளார். (இ-10)




# அரசியல் கட்சிகள் தான் அபிவிருத்திக்குத் தடை

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசியல் கட்சிகள் நாட்டில் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் எதிர்ப்பினையே தெரிவித்து வருவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.அத்துடன் அதனூடாக வைராக்கியங்களை வளர்த்துக் கொண்டு தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் மேலும் குற்றஞ்சாட்டினார்.**

எனினும் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போதும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பது சவாலான விடயம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடுவெல மாநகரசபை ஊடாக அபிவிருத்தி செய்யப்பட்ட வெலிவிட்ட வீதி மற்றும் சுஹந்த மாவத்தை ஆகியவற்றை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

## பிள்ளைகளுக்கான பாடசாலை அனுமதி தொடர்பில் ஒரு புதிய தேசிய கொள்கை அறிமுகப்படுத்தப்படும்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பிள்ளைகளுக்கான பாடசாலை அனுமதி தொடர்பில் பெற்றோர்.அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளின் பின்னால் செல்வதை தவிர்க்கும் வகையில் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிப்பது தொடர்பில் ஒரு புதிய தேசிய கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்..

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.



பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுமதிப்பது தொடர்பில் இதுவரையில் எல்லா அரசாங்கங்களும் எடுத்த தீர்மானங்கள் வெற்றியளிக்கவில்லை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி. இது தொடர்பில் எல்லா அரசாங்கங்களும் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியமையையும் நினைவு கூர்ந்தார்.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிப்பது தொடர்பில் பெற்றோர் போராட வேண்டியிருப்பின் அது எல்லா அதிகாரிகளினதும் கவனத்தைப் பெறவேண்டிய ஒரு விடயமாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி. பிரபல பாடசாலைகளில் கிடைக்கக் கூடிய எல்லாவற்றையும் ஏனைய எல்லா பாடசாலைகளிலும் கிடைக்கச் செய்வதற்கு ஒரு அரசாங்கம் என்ற வகையில் தற்போதைய அரசாங்கம் எல்லா அர்ப்பணிப்புகளையும் செய்யும் என்றும் தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகளில் உள்ள சிறப்புகளை போட்டித் தன்மையற்ற பாடசாலைகளிலும் ஏற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலையும் பங்களிப்பையும் பெற்றுக்கொடுக்குமாறு இதன் போது ஜனாதிபதி பாடசாலை அதிபர்களைக் கேட்டுக் கொண்டார். (இ-10)

## கடந்த 6 மாதங்களில் 24 பேர் டெங்கு நோயால் உயிரிழப்பு

நாட்டில் மழையுடனான வானிலை நிலவுவதை அடுத்து டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதுடன். கடந்த ஆறு மாத காலப்பகுதியில் 24 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 18 ஆயிரத்து 735 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேல் மாகாணத்திலேயே அநேகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது.

கண்டி போதனா வைத்தியசாலை. தேசிய வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகளில் அதிகமாக டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 2ஆம் திகதி வரை முப்படையினரும், பொலிஸாரும் இணைந்து மூன்று நாட்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-10)

## யாழ்.,கிளிநொச்சி மீளாய்வுக் கூட்டம்





(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தலைமையில் நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மீளாய்வுக் கூட்டத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் எதிர்கால திட்டங்கள் கடந்தகால திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் வாழ்வின் எழுச்சி திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளர்கள், யாழ் மாவட்ட அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

## ஹெரோயினுக்கு 50,000 பேர் அடிமை

இலங்கையில் சுமார் 50 ஆயிரம் பேர் ஹெரோயின் போதைவஸ்துவுக்கு அடிமையாகியுள்ளனர்.

அதேநேரம் சுமார் 2 இலட்சம் பேர் கஞ்சா போதைப் பொருளுக்கு அடிமையாகியிருப்பதாக தேசிய அபாய ஔடத கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் வருடந்தோறும் ஆயிரம் முதல் 2000 பேர் வரையான மக்கள், போதைவஸ்துகளுக்கு புதிதாக அடிமையாவதாக சபையின் தலைவர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த தகவல்கள் யாவும் இரகசியமாக எடுக்கப்பட்டவையாகும். எனினும் அடுத்த வருடத்தில் இது தொடர்பான முழுமை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியாக போதைப்பொருள் எதிர்ப்பு நாள் நாளை 26 ஆம் திகதியன்று கொண்டாடப்படவுள்ள நிலையிலேயே இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-10)

# 12 மில்லியன் பெறுமதியான ஹெரோய்ன் கண்டுபிடிப்பு

## ஆறு பேர் கைது

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கிலோ 50 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப் பொருளுடன்2 பெண்கள்உட்பட ஆறு பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு சுற்றிவளைப்புக்களின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லம்பிட்டிய பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 600 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் பெண்கள் இருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது முச்சக்கரவண்டிகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிராண்ட்பாஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 450 கிராம் ஹெரோய்னுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோய்னின் பெறுமதி 12 மில்லியன் ரூபாவாகும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-12)

# அதிபர், இரு ஆசிரியர்களுக்கு யூலை 4 வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரை அண்மித்த பாடசாலையில் மாணவிகளுடன் தகாத முறையில் நடந்த ஆசிரியருக்கு உரிய நடவடிக்கை எடுக்காது அதனை மூடிமறைக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அப் பாடசாலையின் அதிபர் மற்றும் ஏனைய இரு ஆசிரியர்களையும் எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்

குறித்த பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் அங்கு கல்வி கற்கும் மாணவிகள் சிலருடன் தகாத முறையில் நடந்து கொண்டதான குற்றச்சாட்டில் குறிதத ஆசிரியரை கைது செய்து அவருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாடசாலை மாணவர்களும் பழைய மாணவர்களும் வலியுறுத்தியிருந்தனர்.

அத்துடன் இக் கோரிக்கையை முன்வைத்து போராட்டம் ஒன்றையும் அவர்கள் நடத்தியிருந்தனர். இதனையடுத்து குறித்த ஆசிரியரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதிமொழி அளித்ததன் பின்னர் அவர்கள் தமது போராட்டத்தை கைவிட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஆசிரியர் அப் பாடசாலையின் அதிபர் சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றும் ஆசிரியர் ஒருவருமாக மொத்தம் மூவரை யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியிருந்த நிலையில் அவர்களை எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் சதீஸ்தரன் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட மற்றுமொரு ஆசிரியை கைது செய்த பொலிஸார் அவரை யாழ் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-9)

# சமுர்த்தி உத்தியோகத்தர்...

நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தலைமையில் நேற்றைய தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டில் தொழில் அதிபர்களைத் தவிர ஏனைய 92 வீதமான மக்கள் அனைவருக்கும் சிறுநிதித்தேவை ஏற்பட்ட வண்ணமே உள்ளது.

அந்த சிறு நிதித்தேவையை பூர்த்தி செய்வதற்கு கடன் வழங்குவதற்காக பிணையாளிகள் தேவைப்படுகின்றனர்.

இதனால் பிணையாளிகள் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். ஆனால் பிணையாளிகளே இல்லாமல் கடன் வழங்கும் வேலைத்திட்டம் சமுர்த்தி வேலைத திட்டத்தில் மட்டும்தான் உள்ளது.

ஆனால் குறித்தவேலைத் திட்டம் கடந்த 10 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது நடைமுறைப் படுத்தப்படாத காரணத்தால் வேறுதனியார் நிறுவனங்கள் பல எம் மக்களுக்கு கடன் வழங்குவதற்கென முன்வந்துள்ளன.

இலங்கையில் தற்போது இவ்வாறுகடன்வழங் குவதற்காக ஏறத்தாழ 29 தனியார் நிறுவனங்கள் உள்ளன. அரசியல்வாதிகளும் கடன் வழங்கும் நிறுவனத்தை ஆரம்பித்துள்ளனர். ஆனால் குறித்த நிறுவனங்களில் அதி கூடியவட்டிவீதம் அறவிடப்படுகிறது.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அந்த நிலைமாற்றப்படவேண்டும்.

சமுர்த்தி வேலைத்திட்டங்களில் ஒன்றாக வறுமை ஒழிப்பு வேலைத் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆனால் செயற்படுத்துவது குறைவாக உள்ளது, தற்போது இத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 30 வீதமானதொகைதான் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மிகுதித் தொகைளை மக்கள் வங்கி மற்றும் இலங்கைவங்கிகளில் நிலையானவைப்பு செய்துள்ளோம்.

ஆகவே மக்களுக்காக புதிய கடன் திட்டங்களை உருவாக்கும் தேவை எமக்குள்ளது. அந்தவகையில் துரிதகடன் சேவைத்திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதற்கு முதலில் வறியவர்களை இனம் காணவேண்டும் அவர்களுடன் நெருக்கமாக பழக வேண்டும் அவர்களின் தேவைகளை அறிந்துகொண்டு உதவி செய்யவேண்டும்.

சிறுதொழில் முயற்சியாளர்கள் பலர் தனியார் நிறுவனங்களின் விளம்பரங்களை நம்பி ஏமாந்து போகிறார்கள். இலகுகடனை தருவதாக கூறி ஆலோசனை வழங்கும் பல நிறுவனங்களிடம் ஏமாந்து போகிறார்கள். இவற்றில் இருந்து எம் மக்களை பாதுகாக்க வேண்டுமெனில் எமது மக்களின் சிறு நிதித் தேவைகளை இனம் காண வேண்டும். அவர்களை அணுகி அவர்களுக்கு உதவவேண்டும்.

மேலும் நாம் சமூகபாதுகாப்பு பணிகளை சரியாக செய்யவில்லை சமூக பாதுகப்புதிட்டத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்குமிக விரைவில் புலமைப் பரிசில் தொகையை வழங்குவதற்கு பிரதேசசெயலர்கள் முன்வர வேண்டும். கல்விக்காக பல உதவிகளை மேற்கொண்டுவரும் நிலையில் பல்கலைக் கழகங்களுக்கு செல்வதை தவறவிட்ட மாணவர்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

புத்தாண்டு சேமிப்புதிட்டத்தில் இம் முறை எதிர்பார்த்த அளவை விட அதிகமான பணத்தை உத்தியோகத்தர்கள் சேமித்துள்ளார்கள் அவர்களுக்கு தேசியரீதியிலும் மாவட்டரீதியிலும் பெருந்தொகையான பணப் பரிசில்களை வழங்கவுள்ளோம்.

இதேபோன்று கொடிதின சேமிப்புக்கும் உத்தியோகத்தர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

சகல சமுர்த்தி உத்தயோகத்தர்களுக்கும் 10 இலட்சம் ரூபாய் கடன் வழங்கும் திட்டத்துக்கான சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விரைவில் அதனை செயற்படுத்தவுள் ளோம் அத்துடன் உத்தியோகத்தர்களுக்கு திடீர் தேவை அடிப்படையில் மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கவுள்ளோம்.

பலசமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் மிகவும் கஷ்டமான பிரதேசங்களில் சேவையாற்றி வருகின்றார்கள்.

எனவே வெற்றிடங்கள் நிரப்பப்பட்டபின்னர் விரும்பிய இடத்தில் வேலைசெய்வதற்கானசந்தர்ப்பம் வழங்கப்படும். அதுவரை பொறுமையாக சேவையாற்ற வேண்டும்.

மேலும் கள உத்தியோகத்தர்கள் ஒவ்வொருநாளும் தமது வரவை பதிவதில் பாரிய சிக்கல்களை எதிர் கொள்வதாக தெரிவித்திருந்தனர்.

இனிவரும் காலத்தில் ஒவ்வொரு நாளும் தமதுவரவைப்பதிவு செய்ய வேண்டியஅவசியம் இல்லை என்றும் வாரத்தில் ஒருமுறை தமது வரவை பிரதேச செயலகத்துக்கு வந்து பதிவு செய்து கொள்ள முடியும்.

அனைத்து பிரதேச செயலர்களும் வறுமைப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும் கிராம மட்டத்தில் அபிவிருத்தி செய்யவும் வாழ்வாதார உதவிகளை செய்வதற்கும் திட்டங்களை செயற்படுத்த எம்மிடம் சிபாரிசு செய்யும் சந்தர்ப்பத்தில் நாம் உதவிகளை வழங்குவோம். அதன் மூலம் வறிய மக்களுக்கு உதவி செய்யமுடியும்.

மேலும் இனிவரும் காலங்களில் சுற்றுநிருபங்கள் சிங்கள மொழியில் அனுப்பப்படும் அதே வேளை தமிழ் மொழியிலும் அனுப்பப்படும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## நியமன பத்திரம் வெளியிடும் வரை

# புதிய அதிபர்களை பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டாம் - கல்வி அமைச்சு

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் நியமன விதிமுறை ஒழுங்குப்பத்திரம் வெளியிடும்வரை புதிய அதிபர்களை பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டாம் என மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவையில் 3ஆம் வகுப்புக்கு ஆட்சேர்ப்பு செயவதற்காக 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வுஎன்பவற்றில் பெறுபேறுகளின் அடிப்படையில் 3 ஆயிரத்து 858 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடையே 780 பேர் மேற்படி மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். மத்திய மாகாணத்தில் 586 பேரும், தெற்கு மாகாணத்தில் 536 பேரும், வடமேற்கு மாகாணத்தில் 435 பேரும், வடக்கில் 396 பேரும், கிழக்கில் 349 பேரும், வடமத்தியில் 267 பேரும், சப்ரகமுவையில் 260 பேரும் ஊவாவில் 252 பேரும் தகைமை பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு கடந்த மே மாதம் 9-ம் திகதியில் இருந்து சேவை ஆரம்பப் பயிற்சி நாடுமுழுவதிலும் நடைபெற்றது.

அதன்படி, சேவையாரம்ப பயிற்சியை நிறைவு செய்த அதிபர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன.

இந்தநிலையில் கல்வி அமைச்சினால் நியமவிதி முறை ஒழுங்குப் பத்திரம் தயாரிக்கப்பட்டுவருவதாகவும் அதைவெளியிடும்வரை பாடசாலைகளுக்குபுதிய அதிபர்களை நியமிக்கவேண்டாம் என நேற்று முன்தினம் செயலாளர் அறிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)




ஓம் சக்தி

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி

ஸ்ரீ இராஜ மகாமாரி அம்பாள்

திருக்கோவில் இரதோற்சவ விழா

25.06.2016

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

இன்று தேரேறி வரம் அருள வரும்


எமையாளும் எம் தாயே

நின் பாதம் பணிகின்றோம்

ஊரும் பாரும் சிறக்க வரம் அருள்வாய்

ஷைலோ ஐஸ்கிறீம்

(C-5013)

சமய, சமூக புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் நோக்கமாக கொண்டு மக்கள் பணிமனை ஏற்பாட்டில் புனித நோன்பு (கிப்தார்) திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் பிள்ளையார் இன் விருந்தினர் ஹோட்டலில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் மத குருமார்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டு புனித நோன்பு திறக்கும் விழாவை மேற்கொண்டிருந்தனர். (படங்கள்:- கு.கஜரூபன்)

## மூன்றாவது குழந்தைக்கான கொடுப்பனவு ரத்து - ருவான்



பாதுகாப்புப் படையைச் சேர்ந்த உறுப்பினர்களது மூன்றாவது குழந்தைக்கு வழங்கப்படும் ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு இரத்து செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடா ளுமன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக் கையில்,

இந்தக் கொடுப்பனவு வழங்குவதற்காக மூன்றாண்டு களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கு மட்டுமே இவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த திட்டத்தை முன் னெடுப்பதா? இல்லையா? என்பது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

பேச்சுவார்த்தை நடத்தி தேவை என்றால் இந்த திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ருவான் விஜேவர்தன தெரிவித்து ள்ளார். கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்க ஆட்சிக்காலத்தில் இந்த திட்டம் முன் னெடுக் கப்பட்டது.

படைவீரர்களின் மூன் றாம் குழந்தைக்கு கொடுப்பனவு ஏன் வழங்கப்படுவ தில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு பதிலளித்த போது ருவான் விஜேவர்தன மேற்கண்ட பதிலைத் தெரிவித்திருந்தார். (இ-10)


# INVITATION FOR BID
# MUNICIPAL COUNCIL JAFFNA

1.The Chairman, Local Authority Procurement Committee on Behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building or road construction whatever the case may be for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

4.Interested bidders may obtain further information from **Engineer, Municipal Council, Jaffna (T.No: 021 221 6468)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00hrs to 16.00 hrs from **28.06.2016.**

5.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Works Engineer's Office, Jaffna Municipal Council from 28.06.2016 until 12.07.2016 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.2,000.00+ VAT** the method of payment should be by cash.

6.Bids shall be delivered or sent by registered post to the **Commissioner, Jaffna Municipal Council on or before 14.00 hrs on 12.07.2016**. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

7.Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid No | Description of Work | Engineer's Estimated Cost/ (Rs.in million) | Estimated Cost with all Taxes/ (Rs.in Million) | Contract Peri od | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Valid Period |
| NP/JF/JF MC/2016-(c)/01 | Construction of Concrete Road at old Park Road | 1.153 | 1.375 | 3 mon ths | C9 or above (Roads) | 12,000.00 | 91 days (till 10.10. 2016) |
| NP/JF/JF MC/2016-(c)/02 | Improvement of Chemmani Olu nkai at Ariyalai Centre | 2.797 | 3.050 | 3 mon ths | C8 or above (Roads) | 28,000.00 | 91 days (till 10.10. 2016) |
| JMC/WD/ 01/CF.Bu/ 2016/50 | Construction of Library Building at Navanthurai Stage-II | 3.661 | 4.400 | 3 mon ths | C8 or above (Build ings) | 37,000.00 | 91 days (till 10.10. 2016) |

***Chairman/ Commissioner Local Authority Procurement Committee,***
***Municipal Council, Jaffna. 24.06.2016***

(5005)


## இராசி பலன்

25.06.2016

(ஆனி 11, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
பஞ்சமி பிற்பகல் 2.55 மணிவரை
அவிட்டம் முற்பகல் 9.09மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை
சித்தாமிர்தம்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி புத சுக் |
| கேது சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் ஆயிலியம் | | |
| | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

வளவன்

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம், வருமானம் திருப்தி தரும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல படியாக நடைபெறலாம்.

**மேடம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் எளிதில் கைகூடும், ஆனந்தமான நாள்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், வாய்ப்புக்கள் தேடி வரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தடைபட்ட காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** விரயங்கள் கூடும் நாள், சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பணவரவு திருப்தி தரும்.

**சிம்மம்** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும்.

**தனுசு** பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**விருச்சிகம்** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உறவினர் வருகையுண்டு, பணத்தேவைகளை நிறைவேற்ற நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், வாகன சுகமுண்டு.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**கன்னி** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பாக்கிகள் திடீரென வசூலாகலாம், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பிரிவில் கடமையாற்றும் தாதியர்கள் நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர். சத்திரசிகிச்சை கூடத்தில் பணியாற்றும் தாதியர் ஒருவர் மீது குற்றச்சாட்டு ஒன்று சுமத்தப்பட்டு வேறு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டதனை இரத்து செய்ய கோரியே மேற்படி பணிப்புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்ட இந்த பணிப்புறக்கணிப்பினால் சத்திர சிகிச்சைக் கூட சேவைகள் வழமையை விட ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன. தமது கோரிக்கைகள் தீர்க்கப்படாதுவிட்டால் பணிப்புறக்கணிப்பினை எதிர்வரும் சில தினங்களுக்கு தொடர்வதற்கு திட்டமிடப்பட்டு உள்ளதாக தாதியர்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு உரிய தீர்வு வழங்கப்படா விட்டால் சத்திர சிகிச்சை கூடத்தில் மாத்திரம் எம்மால் முன்னெடுக்கப்படும பணிப்புறக்கணிப்பு போராட்டம் வைத்தியசாலையின் அனைத்து பிரிவுகளிலும் இடம்பெறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் வைத்தியசாலை சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்து நோயாளர்கள் பாதிப்பை எதிர்நோக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

வைத்தியசாலை நிர்வாகத்தினால் சத்திரசிகிச்சை கூடத்தில் பணியாற்றும் தாதியர் ஒருவர் மீது குற்றச்சாட்டு ஒன்று சுமத்தப்பட்டு, அதன் மீதான விசாரணை முடிவடையும் வரையில், குற்றம் சாட்டப்பட்ட குறித்த தாதியரை தாதிய பரிபாலகர் அறையில் கடமையாற்றுமாறு வைத்தியசாலை நிர்வாகம் பணித்திருந்ததோடு,

வேறு ஒரு தாதியரை சத்திர சிகிச்சை கூடத்தில் பணியாற்றுமாறும் வைத்திய சாலை நிர்வாகம் பணித்திருந்தது. இந்நிலையிலேயே குறித்த தாதியரை ஏற்கனவே பணியாற்றிய இடத்தில் அனுமதிக்குமாறு கோரியே மேற்படி பணிப்புறக்கணிப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.(இ-4-7)



கைதடி முதியோர் இல்லத்தின் அனுசரணையுடன முதியோர் இல்ல அத்தியட்சகர் எஸ்.திருவாகரன் தலைமையில் முதியோர்களுக்கான ஆன்மீகச் சுற்றுலா அண்மையில் நடைபெற்றது. இதன்போது கைதடி முதியோர் இல்லத்திலிருந்து 21 முதியோர்களும் யாழ்.மாவட்டத்திலிருந்து 9 முதியோர்களும் கிளி.சிவநகர் முதியோர் சங்கத்தைச் சேர்ந்த 21 முதியவர்களும் பங்கு பற்றினர்.

(படம்;- சிவநகர் செய்தியாளர்)

# வடக்கு மாகாண கணக்காய்வு பொதுக்குழு அறிக்கையால் அமைச்சர்களுக்கு ஆபத்து

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கணக்காய்வு பொதுக்குழு அறிக்கை விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டால் மாகாணத்தின் அனைத்து அமைச்சர்களும் பதவி விலக நேரிடுமென எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 55 ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கூட்டுறவுத் துறையில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடி தொடர்பில் விசாரணை செய்வதற்கு மாகாண சபையினால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு நடைமுறைக்கு மாறான விடயங்கள் தொடர்ந்து வருகின்றன. தமக்கு வேண்டாதவர்கள் மீதான விசாரணைகளை தீவிரமாக முன்னெடுத்து அது தொடர்பிலான அறிக்கையும் முழுமையாக மாகாண சபையில் வாசிக்கப்படுகின்றது.

ஆனால் எதிர்க்கட்சி தரப்பாகிய நாமும் பல அறிக்கைகள் தொடர்பில் விவாதத்திற்கு விடுமாறு கோரியிருந்தோம்.

ஆனால் அப்போதெல்லாம் ஆளும் தரப்பினர் வாய் மூடி இருந்துவிட்டு இப்போது தமக்கு வேண்டாதவர்கள் மீதான விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கையையும் முழுமையாக வாசித்து விவாதிக்கப்படுகின்றது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் மாகாண கணக்காய்வு பொதுக்குழு அறிக்கை விவாதிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இதன்போது குறுக்கிட்ட அவைத்தலைவர் இது தொடரபில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என கூறினார். எனினும எமக்கு அறிக்கை வேண்டாம் இதன் மீதான விவாதம நடத்தப்படல் வேண்டும். குறித்த மாகாண கணக்காய்வு பொதுக்குழு அறிக்கை இன்னமும் சபை அங்கீகரிக்கவில்லை என்ற கருத்தினையும் எதிர்க்கட்சி தலைவர் முன்வைத்தார்.

மேலும் ஏன் இவற்றை மறைக்கின்றீர்கள்? எல்லாவற்றையும் விவாதிக்கலாம் தானே. தமக்கு தேவையானதை மட்டும் விவாதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இது நடைமுறை பிழையாகும் எனவும் கூறினார். இருந்த போதிலும் குறித்த அறிக்கை கடந்த அமர்வில் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டதாக அவைத் தலைவர் மீண்டும் கூறினார.

எனினும் எதிரக்கட்சி தலைவரது கோரிக்கை நியாயமாகும்என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான சுகிர்தன், தவநாதன் ஆகியோர் வலியுறுத்தினார்கள். இந்தக்கோரிக்கைக்கு அமைய அடுத்த அமர்வில் குறித்த அறிக்கை தொடர்பில் விவாதிக்க முடியும் என அவைத் தலைவர் தெரிவித்தார்.(இ-4)

# கனடா நாட்டின் மீள்குடியேற்ற அதிகாரிகள் பலாலி வடக்கு மக்களுடன் கலந்துரையாடல்



கனடா நாட்டின் மீள்குடியேற்றவிவகாரத்திற்குப்பொறுப்பான அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் பலாலி வடக்கு அன்ரனிபுரம் கிராமத் திற்கு சென்று அங்குள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பின் போது தமக்கான தேவைகள் தொடர்பாக மக்களால் எடுத்துக் கூறப்பட்டது. இதற்குப் பதிலளித்த அதி காரிகள் இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சருடன் கலந்துரையாடி உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரிவித்தனர்.(இ-5-9)

# ஊக்குவிப்பு,கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோவிலாக்கண்டி மேற்கு தச்சன்தோப்பு கந்தையா கன கம்மா நிதியம் நடத்தும் ஊக்குவிப்பு கௌரவம் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற வுள்ளது.திருமதி முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாயி கல்வி நிலைய இயக்குநர் செ.பத்ம நாதன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# மாணவனின் சர்வதேச மட்ட சாதனை






உலக உணவுத்திட்ட நிறுவனத்தினால்பாடசாலைமாணவர்களுக்காக நடத்தப்பட்ட பூச்சியப்பசி/ பசியற்ற உலகம் என்ற தலைப்பிலான சித்திரப்போட்டியில் யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் சி.சாருகான் இலங்கை வெற்றியாளர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இத்தாலியில் நடத்தப்பட்ட சர்வதேச சாதனையாளருக்கான கண்காட்சியில் சர்வதேச மட்டத்தில்தெரிவுசெய்யப்பட்டசாதனையாளர்கள் 20 பேரில் மாணவன் சாருகானும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கண்காட்சிக்கு வருகை தந்த உலக கிறிஸ்தவ மதத்தின் 266 ஆவது திருத்தந்தையான பிரான்சிஸ் அடிகளாரால் கௌரவிக்கப்பட்டதுடன் பிரான்ஸிஸ் அடிகளாருக்கு இம் மாணவனின் சித்திர ஆக்கம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இ-5)

# கல்வியாளர் ஒன்றியம் நடத்தும் சமூகமேம்பாட்டுக்கான கருத்தாடல்

வட மாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியம் நடத்தும் சமூக மேம்பாட்டுக்கான கருத்தாடல் களம் -01 இன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூயில் வட மாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியத் தலைவரும் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

"இளைய தலைமுறையினரின் ஒழுக்க விழுமிய மேம்பாட்டிற்கு யாது செய்வோம்" என்ற விடயம் தொடர்பில் நடைபெறவுள்ள இக் கருத்தாடல் களத்தில் வரவேற்புரையினை வட மாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியப் பொருளாளர் பொ.அருணகிரிநாதன் வழங்கவுள்ளதுடன் தலைமையுரையினை வடமாகாண சிரேஷ்ட பள்ளிக் கல்வியாளர் ஒன்றியத் தலைவரும் முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளருமான ப.விக்னேஸ்வரன் வழங்கவுள்ளார்.

கருத்துக்களை பேராசிரியர் மா.சின்னத்தம்பி, வண. பேராயர் ஜெபநேசன் அடிகளார், கலாநிதி ஆறு.திருமுருகன், கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் , கலாநிதி செ.சேதுராஜா, ந.விஜயசுந்தரம் ஆகியோர் வழங்கவுள்ளதுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயாணந்தராஜா, சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.கனகலிங்கம் ஆகியோரால் சமகால கள நிலைமை தொடர்பான விடயம் முன்வைக்கப்படும். (இ-5)

# கடையடைப்புக்குத் துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தவர்கள் குறித்து அறிக்கை

## ஜனாதிபதி பிரதமரிடம் சமர்ப்பிப்பு

வற்வரிக்கு எதிராக கடையடைப்பு போராட்டம் நடத்த துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்தவர்கள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அரச புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் நேற்று முன்தினம் இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

கடைகளை மூடுமாறு வற்புறுத்தி துண்டுப் பிரசுரம் விநியோகித்த நபர்கள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் கடைகளை மூடுமாறு கோரி இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அழுத்தம் பிரயோகித்த நபர்களின் புகைப்படங்கள், ஏனைய விபரங்கள் உள்ளடங்கலாக அரச புலனாய்வுப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

கடை உரிமையாளர்களை அச்சுறுத்தும் வீடியோ காட்சிகள் அடங்கிய சீடிக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடைகளை மூடுமாறு வர்த்தகர்களை அச்சுறுத்திய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நோக்கில் இந்த அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (இ-10)

# 50,000 ரூபாய் பணத்துடன் சிறைக்கு சென்றவர் கைது

உதய கம்மன்பிலவுடன் சேர்ந்து சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சிட்னி ஜயசிங்க என்றழைக்கப்படும் ஜயம்பதி பெரேராவின் மகன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் சிறைச்சாலையில் உள்ள தனது தந்தையை பார்வையிட வருகையில் இவரிடம் 50 ஆயிரம் ரூபாய் பணம் இருந்ததாகவும் இதனடிப்படையிலேயே இவரை கைது செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சிறைச்சாலைக்குள் நுழையும் போது அவரை பரிசோதித்த சிறைச்சாலை புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் இவரிடம் பெருந் தொகையான பணம் இருந்தமையினால் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் சந்தேக நபரால் தனது தந்தைக்கு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட ஆடைகளுக்குள் மறைத்து வைத்திருந்த நிலையிலே, இந்தப் பணத்தை மீட்டுள்ளதாக சிறைச்சாலை பணிப்பாளர் நிசான் தனசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.
(5039)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா:10
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/5988

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 26
உயரம்: 5'2"
தொ.இ: B/5989

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 28 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அவுஸ்திரேலியா PR
தொ.இ: B/5990

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 33 செவ் 12 இல்
உயரம்: 178cm
தகைமை/தொழில்:முகாமைத்துவ பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: B/5991

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 70செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/5626

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 51 செவ் 8 இல்
உயரம்: 161cm
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/5628

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 38செவ் 2 இல்
உயரம்: 5'6'
தகைமை/தொழில்:M.Phil/தனியார் தொழில்
தொ.இ: G/5634

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 25 சூரி செவ் 10 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: G/5638

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
♦செய்திகள்
♦புகைப்படங்கள்
♦நிகழ்வுகள்
♦பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber

# மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பு அரசால் முற்றாக நீக்கம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அனைத்து இராணுவப் பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முதல் மகிந்தவிற்கு வழங்கப்பட்டிருந்த முழு இராணுவப் பாதுகாப்பும் அரசால் அகற்றி கொள்ளப்பட்டுள்ளது.**

மகிந்தவின் பாதுகாப்பிற்காக கடமையில் அமர்த்தப்பட்டிருந்த கேணல் மகேந்திர பெர்னாண்டோ, நெருக்கமான பாதுகாப்பு உத்தியோகத்தரான மேஜர் நெவில் வன்னியாராச்சி உள்ளிட்ட ஐந்து உயர் இராணுவ அதிகாரிகள் மகிந்தவின் பாதுகாப்பு பணிகளிலிருந்து வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன்படி, மகிந்தவிற்கு வழங்கப்பட்ட மொத்த இராணுவப் பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது.மகிந்தவிற்கு பாதுகாப்பு வழங்கிய இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் பல்வேறு கட்டங்களாக வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டனர். இறுதியாக ஐந்து உயர் இராணுவ அதிகாரிகள் மகி ந்தவின் ஜப்பான் விஜயம் நிறைவடையும்வரையில் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட வில்லை.

மகிந்தவின் ஜப்பான் விஜயத்தைத் தொடர்ந்து இந்த உயர் இராணுவ அதிகாரிகளும் இராணுவத் தலைமையகத்திற்கு மீள அழைக்கப்பட்டுள்ளனர்.

மகிந்தவின் இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டமை குறித்து கூட்டு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். எனினும், முக்கிய பிரபுக்கள் அனைவருக்கும் விசேட அதிரடிப் படையின் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்குவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (இ-10)

# பதவி நீடிப்பை எதிர்பார்க்கவில்லை மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்



தனக்கு எதிராக பாராளுமன்ற கோப் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகள் நிறைவடையும் வரை தனது பதவிக்காலம் நீடிக்கப்படுவதை எதிர்பார்க்கவில்லை என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநரின் பதவிக்காலம் இம்மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதுடன், அவருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பாக கோப் குழுவினால் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பிணைமுறி வழங்கல் தொடர்பில் இடம்பெற்ற முறைகேட்டினால் இலங்கை மத்திய வங்கிக்கு பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

இதன் காரணமாக அர்ஜுன் மகேந்திரனின் பதவிக்காலத்தை தொடர்ந்து நீடிக்கக் கூடாது என்று எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே தன்க்கெதிரான விசாரணைகள் நிறைவுறும்வரையில் சேவை நீடிப்பை எதிர்பார்ப்பதில்லை என்று நிதிச் சபைக்கு அர்ஜுன் மகேந்திரன் அறிவித்துள்ளார். (இ-10)

# கம்மன்பிலவுக்கு எதிராக அவுஸ்திரேலியப் பிரஜை

(கொழும்பு)

தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு வந்து சிறையில் உள்ள உதய கம்மன்பிலவுக்கு எதிராக சாட்சியம் அளிக்கவுள்ளதாக அவுஸ்திரேலிய வர்த்தகரான பிரையன் ப்ரடிக் தெரிவித்துள்ளார்.

மேலும் அவுஸ்திரேலியாவில் இருந்தவாறே இணையம் ஊடாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இதனைத் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கம்மன்பிலவின் கைதானது எவ்வகையிலும் அரசியல் பழிவாங்கல் இல்லை என்றும், உண்மையாகவே நிதி மோசடியில் உதய கம்மன்பில ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய சிட்னி ஜயசிங்க இலங்கையர்கள் மூலம் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும், தான் இலங்கையிலிருந்து வெளியேறிச் சென்ற போது இந்த நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம்

## முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வலியுறுத்து

**முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட சகல விதமான சட்டவிரோத குற்றச் செயல்களைக் கட்டுப்படுத் துவதற்கு பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராமங்களில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறு ப்பதிகாரி றமேஸ் இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார்.**




அவ்வாறு அனைவரினதும் ஒத்துழைப்பு களும் சரிவர கிடைத்தால் குறித்த ஒருசிறு காலப்பகுதியினுள் எமது பிரதேசத்தில் காணப்படும் அனைத்து விதமான குற்றச் செயல்களையும் கட்டுப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

முள்ளியவளை வடக்கு பிரதேச கிராம மட்ட அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தி யோகத்தர்கள், சமூக ஆர்வலர்களை ஒன்று திரட்டி கரித்தாஸ் கியூடெக் வன்னி நிறுவனத் தால் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடல் நிக ழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


மேற்படி கலந்துரையாடலானது கடந்த 21 ஆம்திகதிகாலை முள்ளியவளை பொது நோக்கு மண்டபத்தில் கிராம அலுவலர் திருமதி குவாயினி தலைமையில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட வர்கள் அனைவரும் ஒன்றிணை ந்து சட்ட விரோத செயற் பாடுகளை எவ்வாறு கட்டுப் படுத்துவது என்பது தொட ர்பில் மிக நீண்ட நேரம் கலந்துரையாடலை மேற்கொண்டு அதன் அடிப்படையில் முக்கிய மாக கசிப்பு உற்பத்தி விற்பனையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வழக்குகள் பதியப்பட்டவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி அவர்களு டன் கலந்துரையாடி அவர்களுக்கு வாழ்வா தாரங்களை சுயதொழில் முயற்சிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தல், அத்துடன் அவர் களை தொடர்ச்சியாக கண்காணிப்பது என வும் இச்செயற் பாடுகள் அனைத்து கரை துறைப்பற்று பிரதேச செயலரின் அனுமதியு டனும் ஆலோசனையுடனும் நடைமுறைப் படுத்தப்படும். தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அத்தீர்மா னங்கள் உள்ளடங்கிய கடிதம் ஒன்றும் கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயல ருக்கு அனுப்பிவைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது. (2-310)

## ஊற்று விநாயகர் ஆலயத்தில்

# காணிக்கை உண்டியல் — உடைக்கப்பட்டு பணம் திருட்டு

(பரந்தன்)



முரசுமோட்டை இரண்டாம் கட்டை ஊற்று விநாயகர் ஆலயத்தில்காணிக்கைக்கு வைக்கப் பட்டிருந்த உண்டியல் இனந் தெரியாதநபர்களால் உடைக் கப்பட்டு பணம் திருட்டுப் போயுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பா டொன்றை பதிவு செய்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு வழமைபோன்று ஆலயம் மூடப்பட்டு மறுநாள் காலை புதன்கிழமை பூசகர் ஆல யத்தை திறந்த போது உண்டியல் உடைக்கப் பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து ஆலய பரிபாலன சபை யினருக்கும் கிளிநொச்சி பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருடர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு கிராம மக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறான திருட்டு சம்பவம் ஒன்று முரசு மோட்டை பகுதியிலுள்ள முருகன் கோவிலில் கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் இரவு நேரத்தில் இடம்பெற்றது.

கோவிலுக்குள் நுழைந்த திருடர்கள் கிணற் றிலிருந்த நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் ஆலயத்தின் உள்வளாகத்தில் இருந்த மற் றுமொரு நீர் இறைக்கும் மோட்டார் ஆகிய வற்றை களவாடி சென்றுள்ளனர்.

குறித்த பகுதியில் குறுகிய காலப்பகுதிக் குள் ஆலயங்களை இலக்குவைத்து இரண்டு திருட்டுக்கள் நடைபெற்று உள்ளமை குறி ப்பிடத்தக்கது.

அத்தோடு குறித்த சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை கிளி நொச்சி பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (2-312)

# இம்முறை மடு அன்னையின் கொடி ஏற்றப்பட்டு திருவிழா ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடித் திருவிழா நேற்று முன்தினம் மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம் பித்துள்ளது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ் தலிக் கப் பரிபாலகர் ஓய்வுநிலை நிலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பாப்பரசர் கொடியினை ஏற்றி நவநாளை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து மடு அன் னையின் கொடியினை திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை ஏற்றி வைத்தார்.

மடுத்திருத்தலத்தின் திருவிழா வரலாற் றில் முதற்தடவையாக கொடியேற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

மடு திருத்தலத்தின் வருடாந்த ஆடி திரு விழா எதிர்வரும் 2 ஆம் திகதி கொண்டாடப் படவுள்ளது.

கொடியேற்றத்துடன் ஆரம்பித்திருக்கும் வழிபாடுகள் எதிர்வரும் ஒன்பது தினங்கள் திருச்செபமாலையுடனான நவநாள் வழி பாடுகளாக இடம்பெறும்.


'இறை இரக்கம் நிலையானது, நிபந்தனை அற்றது, நிரந்தரமானது' எனும் மையப் பொருளில் இன்றைய முதல்நாள் ஆரா தனைகள் இடம்பெறுகின்றன.

எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி மாலை விசேட நற்கருணை வழிபாடு இடம் பெறும்.

மறுநாள் இரண்டாம் திகதி காலை விசேட திருவிழா திருப்பலி இடம்பெற்று மடு அன்னையின் திருச்சொரூப ஆசீருடன் மடுத் திருத்தலத்தின் வருடாந்த ஆடி திருவிழா நிறைவடையும். (2)




# கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன்



மாகாணசபை ஒதுக்கீடுகளின் மூலம் நடைபெறும் கட்டுமானப்பணிகளைப் பார் வையிட்டதோடு ஏனைய தேவைகளும் நிறைவேற்றப்படும் என மக்கள் மத்தியில் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவி கரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி மு/குமுழமுனை மகாவித்தியாலயத்துக்கு ரவிகரன் சென்று மாகாண ஒதுக்கீடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வகுப்பறைக்கான மாடிக் கட்டடம், ஆசிரியர் விடுதி ஆகியவற்றின் கட்டுமா னப்பணிகளை பார்வையிட்டார். அங்கு வருகை தந்திருந்த பெற்றோர்கள் மத்தியில் அவர் உரையாற்று கையில், இவ்வாண்டுக்கான ஒதுக்கீடுக ளில் சுமார் 58 மில் லியனுக்கு மேற்பட்ட நிதி இப்பாடசாலையின் கட்டுமானப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பின்தங்கிய தேவைகள் படிப்படி யாக தீர்க்கப் பட்டு வருகின்றன. மற்றும் பௌதீக வளத் தேவைகள் மட்டுமல்ல ஆளணிக்குறைபாடு களும் படிப்படியாக தீர்க்கப் பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். அதன்பின் பாடசாலை யின் வளர்ச்சி மற்றும் பெற்றோர், மாணவர் களுடைய பங்களிப்புக்கள் பற்றி பாடசாலையின் அதிபர் கருத்துத் தெரிவித்தார். (2-281-250)





சங்கத்தின் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் கண்பார்வை இழந்த முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியை சேர்ந்த முன்னாள் போராளி ஒருவ ரின் குடும்பத்துக்கு துவிச்சக்கர வண்டியும், இரு கண் களின் பார்வையையும் முற்றாக இழந்த முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்தின் வாழ் வாதாரத்துக் காக பசுமாடும் கன்றும் வழங்கப்பட்டது. அத்துடன் போரில் கையை இழந்த தேவிபுரம் பகுதியில் வாழும் முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்திற்கு கோழி கள் வளர்ப்பதற்காக 15000 ரூபா பணமும் அக்குடும் பத்தின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இறைச்சிக்காக எடுத்து செல்லப்பட்ட 6 ஆமைகள் பொலிஸாரினால் மீட்பு




(மல்லாவி)

கிளிநொச்சி ஆனை விழுந்தான் பகுதியிலிருந்து இறைச்சிக்காக எடுத்த செல்லப்பட்ட 6ஆமைகள அக்கராயன் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன, குறித்த பகுதியில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட ஆமைகளை இறைச்சிக்காக கொள்கலன் ஒன்றில் எடுத்து சென்ற போதே குறித்த 6 ஆமைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது,

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின்போது குறித்த ஆமைகளை எடுத்து சென்ற நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், எடுத்து செல்லப்பட்ட ஆமைகள் மீட்கப்பட்டன. குறித்த ஆமைகளை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் ஊடாக வன ஜீவராசிகள்திணைக்களத்திடம் நேற்று வெள்ளிக்கிழமை கையளிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அருகிவரும், ஆமைகள், உடும்பு, மான், மரை உள்ளிட்ட வன விலங்குகளை வேட்டையாடி இறைச்சிக்காக பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆங்காங்கு இடம் பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15-312)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இருநூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நீதிபதிகள்,சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோரினால் துவிச்சக்கரவண்டிகள் பாதணிகள்,கற்றல் உபகரணங்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உதவும் வகையில் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நீதிமன்ற நீதிபதிகள்,சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து நிதியினை வழங்கி மேற்படி பொருட்களை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு நான்கு மாவட்டத்திலும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் ஊடாக 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவ் வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி மண்டபத்தில் நீதிமன்ற வளாகத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சிற்றப்பலம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 35 மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள், பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.ரீ.மனாப், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா,கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகள்,நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்படி நான்கு மாவட்டங்களிலும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இருநூறு மாணவர்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் ஐந்து இலட்சத்து இருபத்து ஐயாயிரம்ரூபா நிதி சேகரிக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்டதில் 53 மாணவர்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 35 மாணவர்களுக்கும் மன்னார் மாவட்டத்தில 72 மாணவர்களுக்கும்வவுனியா மாவட்டத்தில் 40 மாணவர்களுக்கும் இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-15)




# பொதுமக்களின் கருத்துக்கள் வடக்கு மாகாணத்தில் சிறந்ததொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவும்

## வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் உறுதி

படம்: கு.கஜரூபன்



(பனிக்கன்குளம்)

முற்று முழுதான மக்களின் கருத்துக்கள் நல்லதொரு ஸ்திரமான பொருளாதாரத்தை வடக்கு மாகாணத்தில் கட்டியெழுப்புவதற்கு அடிப்படையாக அமையும் என்றும் தான் உருவாக்கப்போகும் நியதிச் சட்டத்திற்கு இது பக்கபலமாக அமையும் எனவும் வடக்கு மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் வர்த்தக சங்கங்களுக்கான விசேட கலந்துரையாடலில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வர்த்தக சங்கங்களுக்கான விசேட கலந்துரையாடல் ஆனது நேற்று முன்தினம் யாழ்ப்பாண வர்த்தக சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பவர்கள் வர்த்தக பெருமக்கள், அந்த வகையில் எமது வடக்கு மாகாணத்தின் வர்த்தகர்கள் யுத்தத்தின் போதும் அதன் பின்னரான காலப் பகுதியிலும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் ஏனைய பொது விடயங்களிலும் கணிசமான பங்கினை ஆற்றியிருக்கின்றார்கள். குறிப்பாக வறிய மாணவர்களின் கல்விக்காகவும் அவ்வப்போது ஏற்படுகின்ற அனர்த்தங்களின் போதும் இவர்களது பங்கு மற்றும் செயற்பாடுகள் அளவுக்கு அதிகமாகவே காணப்பட்டு இருக்கின்றது.

ஆனால் இன்று இவ்வாறான வர்த்தகர்கள் தங்களது பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப முடியாமலும் எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை ஓர் ஸ்திரமான நிலையில் வைத்திருக்க முடியாமலும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த வகையில் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு துரிதமாக செயற்படுவது காலத்தின் தேவையாக அமைகின்றது. குறிப்பாக இவ்வாறு கஷ்டப்படுகின்ற வர்த்தகர்களை இந்நிலைமையில் இருந்து மீட்டெடுப்பதற்கும் எமது பொருளாதரத்தை ஒரு ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கும் திட்டங்களை வகுப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

வடக்கு மாகாணத்தில் வர்த்தக வாணிபத்தினை சீர்செய்வதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும், ஓர் வடமாகாணம் சார்ந்ததான வர்த்தக வாணிப அதிகாரசபை ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் மேலும் வடமாகாணத்தில் இருக்கின்ற புத்திஜீவிகள், வர்த்தகர்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் அனைவரும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மிகவும் உறுதியான நிலைக்கு கொண்டு வருவதற்கு தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக் களையும் யோசனைகளை யும் எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதிக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண வர்த்தக சங்கங்களின் தலைவர். செயலாளர். பொருளாளர். உபதலைவர் ஆகியோர் கலந்து கொணடு தத்தமது மாவட்ட பிரச்சினைகளையும் எதிர்காலத்தில் பொருளாதாரத்தை ஸ்திர நிலையில் வைத்திருப்பதற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் அமைச்சருடன் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.(2-7-312-15-281)

# காணாமற்போனதாக கூறப்பட்ட குடும்பஸ்தர் சடலமாக மீட்பு



(குருமன்காடு)

வவுனியா திருநாவற்குளத்தில் வசித்து காணாமல் போனதாக கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

கடந்த 22 ஆம் திகதி புதன் கிழமை மேசன் வேலைக்காக சென்ற திருநாவற்குளத்தை சேர்ந்த பாக்கியநாதன் ஜஸ்டின் (வயது 49)என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே காணாமற் போயுள்ளதாக மனைவியினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய ப்பட்டிருந்தது.

இந் நிலையில் குடியிருப்பில் இருந்து பூந்தோட்டம் செல்லும் வீதியில் அமைந்துள்ள பாலமொன்றின் கீழ் ஆணொருவரின் சடலம் காணப்படுவதாக வவுனியா பொலிஸாருக்கு தகவலொன்று கிடைக்கப்பெற்றிருந்தது.

இதனை அடிப்படையாக வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இச் சடலம் காணாமற் போனதாக கூறப்பட்ட பாக்கியநாதன் ஜஸ்டினின் என்பது தெரிய வந்திருந்தது.

இந் நிலையில் இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# மஹோற்சவம்

(கிளிநொச்சி)

பரந்தன் குமரபுரம் அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூர்வாங்க் கிரியைகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தல் இடம் பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

தினமும் பூசை வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வந்து அருள் பாலிப்பார். (2)

# இலங்கை வெளிவிவகாரக்கொள்கை; மைத்திரி - மங்கள இடையே மோதல்



கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவகத்தின் மண்டபம் ஒன்றை தந்துதவுமாறு சில வாரங்களுக்கு முன்னர் கோரிக்கை ஒன்று விடுக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன அந்தக் கருத்தரங்கின் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் இக்கருத்தரங்கானது ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவராலேயே ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. கருத்தரங்கை நடத்துவதற்கான மண்டபத்தைத் தந்துதவுமாறு கோரி அனுப்பப்பட்ட விண்ணப்பத்தை, வெளிவிவகார அமைச்சின்கீழ் செயற்படும் கதிர்காமர் நிறுவகமானது இந்த அமைச்சின் அமைச்சரான மங்கள சமரவீரவின் அனுமதிக்காக அனுப்பியது.

அவர் அக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ள பேச்சாளர்



களின் பட்டியலை வாசித்தார். இப்பட்டியலில் கலாநிதி தயான் ஜெயதிலகவின் பெயர் காணப்பட்ட போது, இதற்கான அனுமதியை வழங்குவதற்கு மங்கள மறுத்தார். இக்கருத்தரங்கானது ஜனாதிபதி செயலகத்தால் ஒழுங்கு படுத்தப்பட்டது என்பதைக் கூட மங்கள தனது கவனத்திற் கொள்ளவில்லை.

மங்களவின் அனுமதி கிடைக்கவில்லை என மைத்திரிக்கு தகவல் வழங்கப்பட்டது. மைத்திரியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பிறிதொரு இடத்தில் இக்கருத்தரங்கை ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன. இதன் பிரகாரம் இக்கருத் தரங்கானது பண்டாரநாயக்க ஞாபகர்த்த அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

**புலிகளின் நிகழ்ச்சி நிரல்**

தயான் மற்றும் மங்கள வின் வெளிவிவகாரக் கோட்பாடுகள் மைத்திரியின் வெளிவிவகாரக் கோட்பாடுகளாகவே நோக்கப்படுகின்றன. இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விமர்சிக்கப்பட்டுள்ளார். கருத்தரங்கு இடம்பெற்ற அன்றைய நாளன்று, புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே மங்களவும் ரணிலும் செயற்படுவதாக தயான் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டிருந்த அதேவேளையில் இக்கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியிருந்த ஜனாதிபதி செயலகமானது இதனை மைத்திரியின் வெளியுறவுக் கோட்பாடு என விளக்கியது. தற்போது, மைத்திரியின் வெளியுறவுக் கோட்பாட்டுத் தத்துவாசிரியராக தயான் மாறியுள்ளார்.

இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில், மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தயான் பணியாற்றினார். இத்தேர்தல் பரப்புரையில் மைத்திரி மற்றும் ரணில் ஆகியோர் புலிகளினதும் மேற்குலகினதும் கைப்பாவைகள் என தயான் ஜெயதிலக குறிப்பிட்டிருந்தார். மகிந்த தேர்தலில் தோல்வியுற்ற பின்னர் மெதமுலனவில் தங்கியிருந்த போது மீண்டும் அரசியலில் ஈடுபடுமாறு மகிந்தவுக்கு உத்வேகம் கொடுத்த முன்னணி நபர்களில் தயானும் ஒருவராவார்.

மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வருவதை ஆதரித்து நுகேகொடவில் மேற்கொள்ளப்பட்ட பேரணி ஒன்றில்; தனது அறிக்கையை வாசிக்குமாறு தயானிடம் கையளித்திருந்தார் மகிந்த. அறிக்கைகளின் வாயிலாக, மகிந்தவின் அறிக்கையைத் தயார்படுத்துவதில் தயான் மிக முக்கிய பங்காற்றியுள்ளார். மைத்திரி, சந்திரிகா மற்றும் ரணில் ஆகியோர் மீது தேசத் துரோகி என்கின்ற முத்திரையை தயான் குத்தினார்.

மைத்திரி மிகவும் சிறப்பான வெளிவிவகாரக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார் என்பதை பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கின் போது தயான் அவதானித்தார். தயான் தனது உரையில் மைத்திரியைப் போற்றியும் ரணில் மற்றும் மங்களவைத் தாக்கியும் கருத்துக்களைக் குறிப்பிட்டதை மைத்திரி செவிமடுத்தார். இதன்பின்னர் இவர் மைத்திரி-ரணில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான பாரியதொரு அரசியற்போரை மேற்கொண்டார்.



இக்கருத்தரங்கிற்குப் புறப்படுவதற்கு முன்னரும் தயான் ஜெயதில்க, ராஜபக்ஷக்களைச் சந்தித்திருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தரங்கு முடிவடைந்ததன் பின்னர் மங்கள மற்றும் ரணில் மீது குற்றம் சுமத்துவதற்கான வாய்ப்பை கொழும்பு தொலைக்காட்சி சேவை தயானுக்கு வழங்கியது. தற்போது, மைத்திரியின் உத்தர வாதத்துடன் தொடர்ந்தும் ரணில் மற்றும் மங்கள மீதான தயானின் வாய்மூலத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

இக்கருத்தரங்கில் மிக முக்கிய சம்பவம் ஒன்றும் இடம் பெற்றது. மைத்திரியின் வெற்றிக்காகவும் மகிந்தவின் தோல்விக்காகவும் பணியாற்றிய கலாநிதி ஜெயதேவ உயன்கொடவும் இக்கருத்தரங்கில் உரையாற்றியிருந்தார். ஜனவரி 08 அன்று இடம்பெற்ற தேர்தலில் மக்கள் தமது வாக்குகளை வழங்கி மைத்திரியைத் தெரிவு செய்தனர் என கலாநிதி ஜெயதேச உயன்கொட தெரிவித்தார்.

இவர் மக்கள் வழங்கிய வாக்குகளை ஐ.தே.க வாக்குகள், சிவில் சமூக அமைப்புக்களின் வாக்குகள் மற்றும் சிறுபான்மை வாக்குகள் என மூன்றாக வகுத்துள்ளார். ஆகவே மக்கள் வழங்கிய வாக்குகளைப் பயன்படுத்தி மைத்திரி தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும் என இவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த வாக்கு வங்கிக்கு மைத்திரியே தலைமை வகிக்கின்றார். அமெரிக்காவின் ஒபாமா, பிரிட்டனின் கமரூன், ஜப்பானின் அபே, இந்தியாவின் மோடி, ஜேர்மனியின் அஞ்சலா மோர்கல் ஆகியோர் மைத்திரியின் தலைமைத்துவத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

**ராஜபக்ஷவிற்கு ஆதரவான குழுக்கள்**

ராஜபக்ஷ ஆதரவுக் குழுக்களை மைத்திரி வெற்றி கொள்ள வேண்டும். மிகவும் கெட்டித்தனமான வெளிவிவகாரக் கோட்பாடுகளின் வல்லுநர் மற்றும் உயர் இராஜதந்திரியுமான தயான் ஜெயதிலகவை மைத்திரி வெல்ல வேண்டும். தயான் போன்ற தனி நபர்களின் மனங்களையும் மைத்திரி வெல்ல வேண்டும்.

ரணில் ஆதரவு மற்றும் சந்திரிகா ஆதரவு அமைப்புக்களை மகிந்த தனது பக்கம் வென்றெடுத்திருந்தார். இதற்கு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ரணில் மற்றும் சந்திரிகாவுடன் செயற்பட்ட போது, பீரிஸ் சமஷ்டி ஆட்சியை விரும்பியிருந்தார். பீரிஸ் கூறிய அளவிற்குக் கூட ரணில், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான கருத்துக்களைக் கூறியிருக்கவில்லை. பீரிஸ் சமாதான ஆர்வலராகச் செயற்பட்டிருந்தார்.

அத்துடன் இவர் மேற்குலக அரச சார்பற்ற நிறுவனங்களின் மிகப் பலமான ஆதரவாளராகவும் செயற்பட்டார். சுருக்கமாகக் கூறின், மகிந்த தரப்பினரால் பீரிஸ் தேசத்துரோகி எனவும் முத்திரை குத்தப்பட்டிருந்தார். இவ்வாறானதொரு பண்புகளைக் கொண்டிருந்த பீரிஸ் பின்னர் மகிந்தவால் தனது பக்கம் இணைக்கப்பட்டார்.

பீரிஸ், ராஜபக்ஷக்களுடன் இணைந்த பின்னர், இவர் மேற்குலக நாடுகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமஷ்டி ஆகியவற்றை எதிர்த்து பரப்புரை மேற்கொள்ளத் தொடங்கினார். மைத்திரியுடன் இணைந்த பின்னர் தயான் எவ்வாறு ரணில் மற்றும் மங்களவை எதிர்த்து தற்போது பரப்புரை செய்கிறாரோ அதேபோன்றே பீரிசும் மகிந்தவுடன் இணைந்த பின்னர் தனது எதிரிகளான விமல் மற்றும் ஹெல உறுமயவை எதிர்த்தார்.



தன்னிடம் வருகின்ற மகிந்த ஆதரவுக் குழுக்களிடம் ஜனவரி 8 தேர்தல் விளக்கவுரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என மைத்திரி கூறவேண்டும். ஆனால் மாறாக தயானே மைத்திரியிடம் தோற்கடிக்கப்பட்ட மகிந்தவின் வாக்கு வங்கியை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது எனக் கூறுகிறார். இது முரண்பாடானது.

கருத்தரங்கு முடிந்த கையோடு மைத்திரி தேநீர் அருந்துவதற்காக உயன்கொடவி



ற்கு அருகில் சென்றார். மைத்திரியின் இந்தச் செயலானது தயானைக் காப்பாற்றும் நோக்கத்தைக் கொண்டதா? அல்லது இல்லையா? என்பது இன்னமும் தெரியவில்லை.

நன்றி:-சிலோன் ருடே

# ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் அரசாங்கம் பெற்றுக் கொடுத்துள்ளது

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்



(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்நாட்டு மக்களுக்கு இல்லாமலிருந்த ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் தற்போதைய அரசாங்கம் பெற்றுக் கொடுத்துள்ளது என தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரி, 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றும் கடப்பாட்டுடன் அரசாங்கம் உள்ளதாகவும் தெரிவித்தார்.**

நல்லாட்சி அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்காக ஆதரவளித்த சட்டத்தரணிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற ஒரு சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தேர்தலின் போது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு பொறுமையுடன் அரசாங்கத்துடன் கைகோர்க்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொண்டார்.

ஒரு அரசியல் மற்றும் சமூகப் புரட்சியினூடாக புதிய அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவருவதற்காக சட்டத்தரணிகள் வழங்கிய பங்களிப்புகளுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

தம்மை சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தருமாறு சட்டத்தரணிகள் முன்வைத்த ஒரு கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி, தம்மை சந்திக்கவரும் எந்த ஒருவருக்கும் தமது உத்தியோகபூர்வ இல்லத்தின் கதவுகள் திறந்தேயுள்ளது எனத் தெரிவித்தார்.

மக்கள் எதிர்பார்த்த ஒரு ஜனாதிபதியாக தாம் எல்லோருடைய கருத்துக்களுக்கும் செவிசாய்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பைசர் முஸ்தபா. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ராஜா சமரநாயக, சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் உபுல் ஜயசூரிய, சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன, சிரேஷ்ட சட்டத்தரணி காந்தி கண்ணங்கர ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-5)


## அரசு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஊடாக நிவாரணங்களை பெற்றுக்கொடுக்க முடிவு

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் முன்னெடுப்பின் பேரில், 1983 மே மாதத்தில் இருந்து 2009 மே மாதம்வரை நாட்டில் காணப்பட்ட நிலைமையினால் தமது ஆதனங்களை கைவிட்டுச் செல்வதற்கு நிர்பந்திக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காகவும் சட்டரீதியற்ற மற்றும் அத்துமீறி குடியேறியவர்கள் காலவிதிப்புநடவடிக்கைகள் மூலம் ஆதனத்திற்கான தமது உரித்தினை கோருவதற்கு இயலுமான வகையிலும் நீண்டகாலமாக கிடப்பில்கிடந்த காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தற்பொழுது அரசாங்கத்தினால் மீண்டும் உயிரூட்டப்பட்டுள்ளது. இந்த சட்டம் 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என இயற்றப்பட்டுள்ளது.

இந்தகாலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது பயங்கரவாதக்குழுக்களின் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதுடன் தற்பொழுது காணப்படும் காலவிதிப்புக்கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஒன்றில் தமது உரிமைகளை கோருவதற்கான நிலைமையும் காணப்படுகிறது. காலவிதிப்புக்கட்டளைச் சட்டத்திற்கமைவாக பத்து வருடத்திற்கு அதிகமான ஒரு காலப் பகுதியில் அசையா ஆதனம் ஒன்றில் முழுமையான உரித்தினை எவ்வித தடையுமின்றி தொடராக நபரொருவர் வைத்திருப்பாராயின், அத்தகையநபர் அசையா ஆதனமொன்றின் உரித்தினைப் பெறுவதற்கான உரிமையினைக் கொண்டுள்ளார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் யுத்தம் நிலவிய சூழ்நிலையில் ஆதனங்களை வெளியார் சட்டரீதியற்ற முறையில் அத்துமீறி தன்னகப்படுத்தியவர்கள் தற்பொழுது அசையா சொத்துக்கள் மற்றும் காணிகளுக்கான உரித்தினை கோருகின்றனர். அத்தகைய காலவிதிப்பு நடவடிக்கையானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள மக்களை பாதித்துள்ளதுடன் விசேடமாக தமது ஆதனங்களை கைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் வாழ்பவர்களை இது பாதிக்கின்றது. நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களும் காலவிதிப்பு நடவடிக்கை காணப்படுகின்ற போதிலும் தமது ஆதனங்களுக்கான உரித்தினை கோருவதற்கு இயலுமான வகையில் காலவிதிப்பு(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் நன்மையடையவுள்ளனர்.

சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தவிசேட ஏற்பாடானது இரண்டுவருடம் மாத்திரமே ஏற்புடையதாக இருக்கும். சட்டரீதியற்ற மற்றும் அத்துமீறி தன்னகப்படுத்தலின் பேரில் காலவிதிப்பு நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்ட வட க்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றவர்களும் யுத்தத்தினால் பாரியளவு பாதிக்கப்பட்டவர்களும் யுத்தக் காலப்பகுதியில் இழந்த ஆதனங்கள் மற்றும்காணிகளினது உரித்துக் கோரிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு இப்புதிய சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தமுடியும். இந்த நிவாரணமானது குறுகிய காலப் பகுதியில் மாத்திரம் வழங்கப்படும் என்றவகையில், இரண்டு வருட காலப்பகுதிக்குள் நீதிமன்றத்தில் வழக்கொன்றினைத் தாக்கல் செய்வதற்கான சந்தர்ப்பமொன்று வழங்கப்படுகின்றது.

இந்த காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள யுத்தத்தினால் பாதி க்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கு வதற்கும் காலவிதிப்பு நடவடிக் கைகளின் கீழ் அவர்களது பெறுமதியான அசையா சொத் துக்கள் மற்றும் காணிகளுக்கான உரித்தி னைக் கோருவதற்கும் மூன்று தசாப்த யுத்தத் தின் பின்னர் தமது சொந்த இடங்களில்மீள்குடியேறுவதற்கும் அவர்களுக்கு உதவியாக இருக்குமென்றவகையில் இது காலத்தின் தேவைக்கேற்ற ஒரு ஏற்பாடாகவுமுள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, -புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. (இ)



இலங்கைக்கான பிரிட்டன் பிரதித்தூதுவர்எச்.இலாறாடேவிஸ் மற்றும் இலங்கைக்கான பிரிட்டன் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் ஸ்ரோட் போல்லாண்ட் ஆகியோருக்கும் யாழ்.மாவட்ட படைத் தளபதி மகேஸ் சேனநாயக்கவுக்கும் இடையிலானசந்திப்புஒன்று கடந்த 20 ஆம் திகதி பலாலி படைத்தலைமையகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

## சர்வதேச யோகா தின விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண யோகா ஆர்வலர்களும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் இணைந்து நடத்தும் சர்வதேச யோகா தின விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.யோகா உலக இயக்குநர் எஸ். உமா சுதன் தலைமையில் மிருசுவில் ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவப் பதிவாளர் ஜெ.ஜெயலன், சிறப்பு விருந்தினர்களாக லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் க.ஜீவகுமார், பொறியியலாளர் சோ.முகுந்தன், ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா ரி.நவரத்தினம் ஐயா ஆகியோர்கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-7)

## யாழில் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு இரு நாட்கள்

யாழ்.புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள க.பொ.த உயர்தர பரீட்சையில் கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான இரண்டு (02) நாட்கள் பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும். மேற்படி பாடங்களுக்கு தோற்றவிருக்கும் மாணவர்கள் இக்கருத்தமர்வில் பங்குபற்றி பயனடையலாம். (இ

## நூல் வெளியீட்டு நிகழ்வு

பிரபல எழுத்தாளர் நீர்வை பொன்னையனின் பாஞ்சான் என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீடும் அவரது படைப்புக்கள் பற்றிய கண்ணோட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் உள்ள நீர்வேலி தெற்கு மாதர் சங்க மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வை கலை இலக்கிய வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை சமாதான நீதவான் க.தருமலிங்கமும் நூல் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் வழங்கவுள்ளனர்.

நீர்வை பொன்னையனின் ஏனைய படைப்புக்கள் பற்றிய கண்ணோட்டத்தை எழுத்தாளரும் கிராம அலுவலருமாகிய வடகோவை வரதராஜன், ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், ஓய்வுநிலை பிரதி அதிபர் ஐ.சிவராசா ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)





யாழ்ப்பாணம் புற்றாளை மகா வித்தியாலய 100 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய மூன்று நாள் நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின. ஆண்டு நிறைவு விழா புதிய நிர்வாகத் தொகுதி, திறந்த வெளி கலையரங்கம் நுழைவாயில் என்பவற்றின் திறப்பு விழா, பரிசளிப்பு விழா, நுற்றாண்டு மலர் வெளியீடு. தபால் தலை வெளியீடு என்பன மூன்று நாட்கள் நிகழ்வுகளாக நடத்த ஏற்பாடு செய்த நிலையில் நேற்றைய நிகழ்வில் பாடசாலை நுழைவாயில், நிர்வாகத்தொகுதி, கணனிக்கூட்டம் , திறந்த கலையரங்கம் என்பவற்றின் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் இடம்பெற்றது. அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## இலங்கை - இந்திய

# மீனவர்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

### (சென்னை) சென்னை உயர்நீதிமன்றம்

**இலங்கை-இந்திய மீனவர்கள் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலமே தீர்வுகாண முடியும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.**

இந்திய-இலங்கை கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்காக தமிழக மீனவர்களுக்கான பாரம்பரிய உரிமையை பெற்றுத் தர வேண்டும் எனக் கோரி, மீனவர் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் எல்.டி. ஏ.பீட்டர் ராயன் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது நல மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

குறித்த மனு தலைமை நீதிபதிகள் அடங்கிய அமர்வின் முன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த நீதிபதிகள், இலங்கை அரசு மீது எந்த உத்தரவும் பிறப்பிப்பதற்கும், நாட்டின் எல்லை தாண்டிய



விவகாரங்களில் தலையிடுவதற்கும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. குறித்த விவகாரத்திற்கு, நீதிமன்றம் வாயிலாக தீர்வு காண முடியாது. மாறாக, இரண்டு நாடுகளும் இராஜதந்திர ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலமே குறித்த விவகாரத்திற்கு தீர்வு காண வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதையடுத்து, குறித்த வழக்கு தொடர்பான விசாரணையை நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-10)

## கருணாநிதிக்கான இசட் பாதுகாப்பை வாபஸ் பெற மத்திய அரசு தீர்மானம்

திராவிட முன்னேற்றக் கழக தலைவரும் தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதி உள்ளிட்ட 3 பேரின் இசட் பிளஸ் பாதுகாப்பு வாபஸ் பெற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றது.

நாடு முழுவதும் என்.எஸ்.ஜி. எனப்படும் கொமாண்டோ படை பாதுகாப்பு மொத்தம் 15 அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த தலைவர்களுக்கு குண்டு துளைக்காத வாகனம் 2 பாதுகாப்பு வாகனங்கள், 40 பாதுகாப்பு கொமாண்டோ படை வீரர்கள் பாதுகாப்பு அளிப்பர். இதேபோல் இசட் பிளஸ், இசட், வை மற்றும் எக்ஸ் என பல பிரிவுகளில் தலைவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுகி றது.

இந்த நிலையில் பாதுகாப்பு வழங்கப்படும் தலைவர்கள் எண்ணிக்கையை குறைக்குமாறு மத்திய அரசிடம் கொமாண்டோ படைப் பிரிவினர் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தி.மு.க. தலைவரும் முன்னாள் முதல்வருமான கருணாநிதி, உபி முதல்வர் அகிலேஷ் யாதவ், அஸ்ஸாம் மற்றும் பீகார் முன்னாள் முதல்வர்கள் தருண்கோகய், லாலு பிரசாத் யாதவ் ஆகியோருக்கான இசட் பிளஸ் பாதுகாப்பை விலக்க உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளதெனக் கூறப்படுகின்றது. (இ-10)

## கங்கையில் மூழ்கிய 7இளைஞர்கள் பலி

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கங்கை நதியில் நீராடச்சென்ற இளைஞர் ஒருவர் செல்பி எடுக்க முயற்சித்த வேளையில் ஏற்பட்ட விபத்தில் குறித்த இளைஞர் உட்பட ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இது குறித்து கான்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் ஷாலாப் மாத்துார் கடந்த புதன்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

'பலத்த மழை காரணமாக கங்கை நதியில் ஆழம் அதிகமாக உள்ள நிலையில், அந்த ஏழு இளைஞர்களும் நதியில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தனர்.

இதன்போது சிவம் என்ற இளைஞர் செல்பி எடுக்க முற்பட்ட வேளையில், தமது கட்டுப்பாட்டை இழந்து நதியில் தவறி வீழ்ந்துள்ளார். இதனைத் தொடர்ந்து குறித்த இளைஞனின் அருகில் இருந்த மசூத் என்ற இளைஞர் அவரைக் காப்பாற்றுவதற்கான முற்சியில் ஈடுபட்ட போது அவரும் நீரில் மூழ்க ஏனைய 5 இளைஞர்களும் ஒருவர் பின் ஒருவராக நதியில் மூழ்கியுள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக் குழுவினர், இரண்டு மணி நேரப் போராட்டத்திற்கு பிறகு குறித்த இளைஞர்களின் உடல்களை மீட்டுள்ளனர். பின்னர் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு குறித்த இளைஞர்களை கொண்டு சென்றதில், அவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)



## கருணாநிதிக்கு ஜெயலலிதா சவால்



**கச்சதீவு பிரச்சினைக்கு சட்டசபைக்கு வந்து பதில் அளிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு சவால் விட்டு முதல**மைச்சர் ஜெயலலிதா பேசினார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

தமிழக சட்டசபையில் நேற்று முன்தினம் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து முதலமைச்சர் ஜெயலலிதா பேசினார். முற்பகல் 10.15 மணிக்கு பேசத் தொடங்கிய அவர் 11.38 மணிக்கு தனது உரையை நிறைவு செய்தார். அதாவது, தொடர்ந்து ஒரு மணிநேரம் 23 நிமிடங்கள் ஜெயலலிதா பேசினார்.

1974 ஆம் ஆண்டு கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது பற்றியும், அதனைத் தடுக்க கருணாநிதி தவறிவிட்டது பற்றியும் விரிவாக நான் இந்த மாமன்றத்தில் 20-6-2016 அன்று எடுத்துக் கூறினேன்.

21-6-2016 அன்று கருணாநிதி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கச்சதீவை தாரை வார்க்க தான் எந்தக் காலத்திலும் ஒப்புக்கொண்டதும் இல்லை, உடன்பட்டதும் இல்லை என்று தெரிவித்துள்ளார். 2013ஆம் ஆண்டு மே மாதம் 'டெசோ' அமைப்பின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் இதுதொடர்பாக மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். (இ-10)

# சீனாவில் பயங்கரச் சூறாவளி

# 100 பேர் பலி; 800 பேர் காயம்

(பீஜிங்)

**சீனாவின் கிழக்கு பகுதியில் ஜியாங்சு மாகாணத்தில் நேற்று முன்தினம் பருவநிலையில் அதிரடி மாற்றங்கள் ஏற்பட்டன. சில இடங்களில் பலத்த மழை பெய்தது. இன்னும் சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது. சில இடங்களில் மணிக்கு 125 கி.மீ. வேகத்தில் பலத்த சூறாவளி வீசியது. இந்த அனர்த்த சம்பவங்களில் 100 பேர் உயிரிழந்தனர். சுமார் 800 பேர் படுகாயம் அடைந்தனர்.**



யான்ஷெங் நகரில் மழையுடன், ஆலங்கட்டி மழையும் பெய்தது. சூறாவளியும் வீசியது. இதில் ஏராளமான வீடுகள் சேதம் அடைந்தன.

பல இடங்களில் வீதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. புனிங் கவுண்டியில் பல பகுதிகள் சூறைக் காற்றால் பலத்த சேதம் அடைந்தன. மீட்புப்பணிகளும், நிவாரணப்பணிகளும் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பல்வேறு கிராமங்களில் மரங்கள் வீடுகள் மீது விழுந்து கிடப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்து உள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு பிராந்தியங்களில் மின்சார சேவை மற்றும் தொலைத்தொடர்பு சேவை துண்டிக்கப்பட்டு உள்ளது என்று அந்நாட்டு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# லைகா மொபைல் இன் பாரிய பண மோசடி

## 19 பேர் கைது

(பாரிஸ்)

சர்வதேச அளவில் பாரிய நிறுவனமாகத்திகழும்லைகா நிறுவனத்தின் பிரான்ஸ் கிளையில் கடந்த வாரம் பிரான்ஸ் பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையின் போது 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நிறுவனம் பல மில்லியன் பவுண பண மோசடி மற்றும் வரி ஏய்ப்பில் ஈடுபட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாலேயே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

அதற்கமைய 09 பேர் பணமோசடி குற்றச்சாட்டிலும், 10 பேர் வரி ஏய்ப்பு குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் லைகா மொபைல் நிறுவனத்தின் இயக்குநர்களுள் ஒருவரான அலெய்ன் ஜோசிமெக்கும் (Alain Jochimek) ஒருவர் என்றும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வரி ஏய்ப்பின் அளவு 13 மில்லியன் பவுண்களுக்கும் அதிகம் என்று பிரான்ஸ் அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

பல்வேறு வழிகளில் பண மோசடி செய்திருப்பதாகவும், சந்தேகத்துக்குரிய நிறுவனங்களிலிருந்து பல கோடி பவுண பணம்லண்டன் தபால நிலையங்கள் மூலம் பரிமாற்றப்படுவதைக் கண்காணித்துக் கண்டுபிடித்ததாகவும் பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியப் பிரதமரின் கட்சிக்கு 2.2 மில்லியன் பவுண்கள் நிதி வழங்கியுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நிறுவனம் தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டைகளை போலியான பற்றுச்சீட்டுக்கள் மூலம் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்து வந்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

உலகில் பாரிய தொலைத்தொடர்பு நிறுவனமாக திகழும் லைகா மொபைல் சர்வதேச அளவில் உள்ள தமது வாடிக்கையாளர்களை ஏமாற்றி வந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லைகா மொபைல் நிறுவனத்தின் தலைவரான சுபாஸ்கரன் அல்லிராஜா (Subaskaran Allirajah) இங்கிலாந்தில் வசித்து வரும், இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஒபாமாவுக்கு பின்னடைவு

அமெரிக்காவில்சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்கு முறையான அனுமதி வழங்கும் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் திட்டத்துக்கு பெருத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

நான்கு நீதிபதிகள் ஒபாமாவின் திட்டத்துக்கு ஆதரவாகவும், நான்கு நீதிபதிகள் எதிராகவும் முடிவெடுத்ததால், அந்த சீர்திருத்த நடவடிக்கைகளை உச்சநீதிமன்றம்தடுத்துநிறுத்தியது.

சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் சுமார் 40 இலட்சம் பேரை நாடுகடத்துவதற்கு பதிலாக, அவர்களுக்கு அமெரிக்காவில் பணியாற்றும் உரிமம் வழங்க ஒபாமா நிர்வாகம் விரும்பியது.

ஆனால், நாடாளுமன்ற அதிகார வரம்பைத் தாண்டி, நிர்வாக ரீதியாக ஒபாமா எடுக்க விரும்பிய நடவடிக்கை, அதிகார வரம்பை மீறிய செயல் என்று கூறி, அமெரிக்காவின் 26 மாகாணங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன.

உச்சநீதிமன்றத்தின் இந்த நடவடிக்கையால், ஒபாமா ஜனாதிபதியாக இருக்கும் காலகட்டத்தில் அவரது திட்டத்தை செயறபடுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை, ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன், ஏற்க முடியாதது என்று நிராகரித்துள்ளார். (இ-10)

# இந்தியாவிற்கு ஆதரவில்லை


## சீனா திட்டவட்டம்

(சியோல்)

அணுசக்தி விநியோக நாடுகள் குழுவில் சேர இந்தியாவுக்கு ஆதரவு கிடையாது என சீனா திட்டவட்டாமாக தெரிவித்துள்ளது.

தென்கொரிய தலைநகர் சியோலில் என்எஸ்ஜி நாடுகளின் 2 நாள் ஆண்டுக் கூட்டம் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் என்எஸ்ஜியில் இந்தியாவை சேர்ப்பது தொடர்பாக முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

அணுசக்தி வணிகத்தில் ஈடுபடவும், அணு தொழில்நுட்ப ஏற்றுமதி செய்யவும் இந்த குழுமத்தில் இந்தியா சேர வேண்டியது அவசியம் ஆகிறது. இதில் சேர இந்தியா விண்ணப்பம் அளித்துள்ளது. இதேபோன்று பாகிஸ்தானும் விண்ணப்பித்துள்ளது. இந்நிலையில் உரிய விதிகளை பின்பற்றாதவரை இரு நாடுகளுக்கு என்எஸ்ஜியில் இணைய ஆதரவு வழங்க முடியாது என சீனா அறிவித்துள்ளது.



என்எஸ்சியில்சேர இந்தியா அணு ஆயுத பரவல் தடை (என்.பி.டி.)யில் கையெழுத்திடாதவரை இந்தியாவுக்கு ஆதரவு வழங்க முடியாது என சீனா தெரிவித்துள்ளது. மேலும், விரைவில் இந்தியா கையெழுத்திடும் என்ற நம்பிக்கை உள்ளதாக சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டில் நடைபெற்று வரும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி, சீன ஜனாதிபதியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். அப் போது, என்எஸ்ஜியில் இந்தியா உறுப்பினராவதற்கு ஆதரவளிக்குமாறு ஜீ ஜின் பிங்கிடம் மோடி கோரிக்கை விடுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

என்எஸ்ஜியில் இந்தியா உறுப்பினராக சேர அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

எனினும், என்.பி.டியில் கையெழுத்திடாத காரணத்தால் சீனா, பிரேசில், ஆஸ்திரியா, நியூசிலாந்து, துருக்கி மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் என்எஸ்ஜியில் இந்தியா, பாகிஸ்தான் இணைய கடும் எதிர்ப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது. (இ-10)

# திரையரங்கிற்குள் புகுந்த மர்மநபர் சுட்டுக்கொலை!

## 50 பேர் காயம்

(பெர்லின்)

ஜேர்மனியில் முகமூடி அணிந்து வந்த மர்ம நபர் ஒருவன, பல்லடுக்கு திரையரங்கில் திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தினான். இதில் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், அந்த மர்ம நபரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

ஜேர்மனியின் வியர்ன்ஹெய்ம் நகரில் ஒரே வளாகத்தில் உள்ள பல திரையரங்குகளை கொண்ட பல்லடுக்கு திரையரங்கில் நேற்று முன்தினம் பொதுமக்கள் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்த போது உள்ளூர் நிலவரப்படி பிற்பகல் 3 மணி அளவில் துப்பாக்கியுடன் உள்ளே முகமூடி அணிந்து வந்த மர்ம நபர் ஒருவன் திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டான்.

இதனால், பீதியடைந்த மக்கள் அங்கிருந்து தப்பி ஓடினர்.

இதையடுத்து, மர்ம மனிதன் திரையரங்கில் பதுங்கிக் கொண்டான்.

தகவல் அறிந்து விரைந்து வந்த அதிரடிப்படை பொலிஸார், திரையரங்குக்குள் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர்.

பின்னர், அவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் மர்ம நபர் உயிரிழந்தான்.

இந்த சம்பவத்தின்போது பொதுமக்களில் 50 பேர் காயமடைந்தனர். (இ-10)




# சொந்த அறிவு!

ஓர் ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தான். அவன் எல்லோருக்கும் உதவி செய்யும் இயல்புள்ளவன்.

ஒருநாள், கடைத் தெருவில் பார்வையற்ற ஒருவன் வழி தெரியாமல் தடுமாறுவதைக் கண்டு, அவனை தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். சில நாட்கள் தன் வீட்டில் தங்கிவிட்டுப் போகுமாறு அன்புடன் அவனை வேண்டினான். பார்வையற்ற பிச்சைக்காரன் அதற்கு சம்மதித்தான். சில நாட்கள் சென்றன. பிச்சைக்காரனுக்குத் தொடர்ந்து அப்படி தங்குவதற்குச் சங்கடமாயிருந்தது. தான் கிளம்புவதாகக் கூறினான்.

"இன்னும் சிறிது நாள் தங்கிச் செல்லலாமே!" என்றான் அந்த நல்லவன்.

"இல்லை ஐயா! நானோ வறியவன். என் பிழைப்புக்கான வழியையும் நான் பார்க்க வேண்டும். நெடுங்காலம் இந்த இடத்தில் தங்குவதால், உங்களுக்கும் என்னால் வீண் சுமை. எனக்கும் வீண் சோம்பல் வந்துவிடும். யாராயிருந்தாலும், பிழைப்புக்காக அவரவருக்குத் தெரிந்ததைச் செய்ய வேண்டுமே தவிர, பிறர் மீது சவாரி செய்யக்கூடாது." இதைக் கேட்ட நல்லவன் மகிழ்ந்தான். பிச்சைக்காரனின் தத்துவப் பேச்சு அவனை மிகவும் புளகாங்கிதமடையச் செய்தது.

"சரி! இப்போது இருட்டிவிட்டது., அதனால், இன்று இரவு மட்டும் இங்கே தங்கிவிட்டு, நாளை காலையில் புறப்பட்டுப் போ!" என்றான். பிச்சைக்காரன் இதைக் கேட்டு வெறுமையாகச் சிரித்தான்.



"நானோ பிச்சைக்காரன். பிறவியிலேயே போகிறது?" என்றான். பிச்சைக்காரனின் தெளிவைக் கண்டு வியந்த நல்ல வன்."சரி! இந்த விளக்கையாவது வழித துணைக்கு எடுத்துக் கொண்டு போ!" என்று வேண்டினான்.

"கண் தெரியாதவனுக்கு விளக்கினால் என்ன பயன்?" என்று மறுத்தான்பிச்சைக்காரன்.

"உண்மை. ஆனால், விளக்கு உனக்கு உபயோகப்படாவிட்டாலும், இதனால், உன் எதிரே வருபவர்களுக்கு நீ வருவது தெரியுமல்லவா?" என்று கூறி, விடாப்பிடியாக ஒரு விளக்கை அவனிடம் கொடுத்தனுப்பினான் நல்லவன்.

அதற்கு மேல் மறுக்காமல் விளக்கைக் கையில ஏந்திக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்ற பின், எதிரே வந்த ஒருவன், மடேலென்று பிச்சைக்காரன் மீது மோதிக் கொண்டான். "யாரவன்! கண் மண் தெரியாமல் வந்து மோதுவது?" என்று பிச்சைக்காரன் கத்தினான்.

"மன்னிக்க வேண்டும். நான் நேராகத்தான் வந்தேன். தாங்கள் தான் என் மீது வந்து மோதினீர்கள்!" என்றான் அந்த ஆள்.

"சரி! எனக்குத்தான் கண் தெரியாது. உங்களுக்குமா தெரியாது?" சீறினான் பிச்சைக்காரன்.

"நள்ளிரவு என்பது அனைவருக்குமே பொதுவானதுதானே நண்பரே! இரவு நேர இருட்டில் எனக்கு மட்டும் எப்படி வெளிச்சம் தெரியும்?" என்றான் வந்தவன்.

"அது சரிதான். ஆனால், என் கையில் உள்ள விளக்கு கூடவா உங்கள் கண்களுக்குத் தென்படவில்லை?" என்றான் பிச்சைக் காரன் இன்னும் காட்டமாக.

"உண்மைதான். தாங்கள் விளக்கை ஏந்தியிருக்கிறீர்கள். ஆனால், அது அணைந்து அல்லவா போயிருக்கிறது!" என்றான்.

"தவறு என்னுடையது தான். அவரவரும் தன் சுய அறிவைத்தான் பயன்படுத்த வேண்டும். இரவல் ஞானத்தால் எந்தப் பயனும் இல்லை!" என்றபடியே விளக்கைத் தூக்கியெறிந்துவிட்டு, தன் கைக் கோலை ஊன்றியபடியே நடந்தான். இப்போது அவ னால் சிரமமின்றி நடக்க முடிந்தது. ஆயிரம் பேர் ஆயிரம் சொன்னாலும், அவரவர் சொந்த புத்தியை உபயோகிப்பது நல்லது.

---

06.2016
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1678 - எலேனா பிஸ்கோபியா தத்துவவியலில் முனைவர் பட்டம் பெற்ற முதலாவது பெண மணி என்ற பெருமையைப் பெற்றார்.
- 1940 - பிரான்ஸ் அதிகாரப்பூர்வமாக ஜெர்மனியிடம் சரணடைந்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நோர்டிக் நாடுகளின் மிகப் பெரும் சமர் சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக பின்லாந்தில் ஆரம்பமானது.
- 1950 - வட கொரியாவின் தென் கொரியா மீதான படையெடுப்பை அடுத்து கொரியாப் போர் ஆரம்பமானது.
- 1967 - உலகின் முதலாவது செய்மதித் தொலைக்காட்சி நிகழ்ச்சி நம் உலகம் (Our World) 30 நாடுகளில் காண்பிக்கபபட்டது.
- 1975 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி நாட்டில் அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து தேர்தல்கள், மற்றும் மனித உரிமைப் போராட்டங்களைத் தடை செய்தார்.
- 1975 - போர்த்துக்கல்லிடமிருந்து மொசாம்பிக் விடுதலை அடைந்தது.
- 1983 - லண்டனில் நடந்த உலகக் கிண்ணத் துடுப்பாட்டப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகளை 43 ஓட்டங்களால் வென்றது.
- 1991 - குரொவேசியா, சிலவேனியா விடுதலையை அறிவித்தன.
- 1996 - சவுதி அரேபியாவில் கோபார் கோபுரத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 19 அமெரிக்க இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.
- 1997 - புரோகிரஸ் ஆளில்லா விண்கலம் ரஷ்ய விண்வெளி ஆய்வுக்கூடம் மீருடன் மோதியது.
- 1998 - வின்டோஸ் 98 முதற் பதிப்பு வெளியானது.
- 2007 - கம்போடியாவில் விமானம் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 22 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

- 1900 - மவுண்ட்பேட்டன் பிரபு, பர்மாவின் முதலாம் ஏர்ள் மவுண்ட்பேட்டன், இந்தியாவின் கடைசி வைசிராய். (இ. 1979)
- 1931 - வி. பி. சிங், 10வது இந்தியப் பிரதமர். (இ. 2008)
- 1925 - ராபர்ட் வெஞ்சூரி, அமெரிக்கக் கட்டிடக் கலைஞர்.
- **1962 - நடராஜா ரவிராஜ், யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர்.(இ. 2006)**
- 1966 - டிகெம்பே முடம்போ, காங்கோ கூடைப்பந்து ஆட்டக்காரர்.
- 1974 - கரிஸ்மா கபூர், இந்திய நடிகை,
- 1981 - பூஜா, நடிகை.

### இறப்புகள

- 1894 - மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சுக் குடியரசின் அரசுத் தலைவர.(பி. 1837)
- 1971 - ஜோன் ஓர், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1880)
- 1984 - மிஷேல் ஃபூக்கோ, சிந்தனையாளர. (பி. 1926)
- 2009 - மைக்கல் ஜாக்சன், பாப் இசைப் பாடகர். (பி. 1958)

### சிறப்பு நாள

- மொசாம்பிக் - விடுதலை நாள். (1975)

---


## நடராஜா ரவிராஜ்



நடராஜா ரவிராஜ் சட்டத்தரணியும் யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பின ருமாவார். யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மற்றும் யாழ் பரியோவான் கல்லூரிகளில் கல்வி கற்றார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். ரவிராஜின் "ரவிராஜ் அசோசியேட்ஸ்" எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் பணியாற்றினார். ரவிராஜ் சட்டத்தரணியாக இருந்து அரசியலில் நுழைந்தார். 1984 முதல் 1990 வரையிலும் 1993 முதல் 1997 வரையிலும் மனித உரிமைகள் இல்லத்தை நடத்தினார். 1987 இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் இணைந்தார். 1990 ஆம் ஆண்டு அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரானார். 1997 ஆம் ஆண்டு யாழ். மாநகரசபை பிரதி முதல்வராகவும், 1998 இல் யாழ். மாநகரசபை முதல்வராகவும் தெரிவானார். 2001 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தென்மராட்சி பகுதியில் போட்டியிட்டு இருமுறையும் வெற்றி பெற்றார். 2006 நவம்பர் 10 வெள்ளிக்கிழமை அன்று காலை 7:00 மணிக்கு ரவிராஜ் தெரன தொலைக்காட்சியில் நடந்த ஒரு நேரடி நேர்காணல் ஒன்றில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பி பின்னர் மீண்டும் வீட்டை விட்டு தனது வாகனத்தில் வெளியேறிய போது காலை 8:45 மணியளவில் கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்டவுனில் உள்ள அவரது வீட்டுக்கருகில் விசையுந்து ஒன்றில் வந்த இரண்டு இனந்தெரியாதோரால் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கொழும்பு தேசிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார். ரவிராஜின் மெய்ப்பாதுகாவலரும் காவல்துறையினருமான லக்சுமன் லொக்குவெல்ல என்பவரும் இதன்போது கொல்லப்பட்டார். ஒரு டி-56 ரக துப்பாக்கி ஒன்றையும் சில ரவைகளும் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டன. இலங்கை படைத்துறை யின் காவல்துறை தலைமை அலுவலகத்தின் முன்னாலே தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் வழங்கப்பட்டது.

# 20-ம் திருத்தச் சட்டம் விரைவில் அமுலாகும்

## அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**20 ஆம் திருத்தச் சட்டம் விரைவில் அமுல் படுத்தப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

1978 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட விருப்பு வாக்கு முறைமை மற்றும் தொகுதிவாரி முறை ஆகியவற்றை இன்றைக்கு பொருத்தமான வகையில் 20 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக திருத்தம் செய்யப்படும்.

விருப்பு வாக்கு முறைமை மற்றும் விகிதாசார முறையில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. எனவே தேர்தல் முறைமையில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாக உள்ளது.

தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் அனைத்து பிரதான அரசியல் கட்சிகளும் காணப்படுகின்றன.

தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்ற யோசனைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.


மத்திய செயற்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் இந்த யோசனைக்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இதன்படி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இந்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட 1978 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தை ஒரே தடவையில் திருத்தி அமைப்பது பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது.

அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் திருத்தங்கள் செய்து அதனை நாடாளுமன்றில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# தனியார்துறை முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரி விசேட அழைப்பு




நாட்டின் தேசிய மின்சாரத் தேவையை நிறைவேற்றி எதிர்வரும் பத்து வருடங்களில் நாட்டை மின்சக்தித் துறையில் தன்னிறைவு பெறச் செய்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்து கொள்ளுமாறு தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

மின்சக்தித் துறையில் புதிய முதலீடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார்.

காற்று மூலமான மின்சாரக் கருத்திட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துமாறு இதன்போது ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி. இதற்காக தனியார்துறையின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். சூரிய ஒளியின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்காலத்தில் இலங்கை திட்டமிட்டுள்ளதுடன். இது தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

விக்டோரியா மின் உற்பத்தி நிலையத்தை விஸ்தரிப்பது தொடர்பாகவும் இங்கு முன்மொழியப்பட்டதுடன், அது தொடர்பான சாத்தியப்பாடுகளை கண்டறிந்து தமக்கு ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மின்வலு, மீள்பிறப்பிக்கத்தக்க மின்சக்தித்துறை அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிடிய, அமைச்சர் மலிக் சமரவிக்ரம, அமைச்சின் செயலாளர் கலாநிதி சுரேன் படகொட ஆகியோரும் மின்சார சபை மற்றும் இலங்கை முதலீட்டுச் சபை பிரதிநிதிகள் மற்றும் தனியார் துறை முதலீட்டாளர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (இ-10)

# தகவல் அறியும் சட்டமூலம்; திருத்தங்களை ஏற்றால் ஆதரவு!- மகிந்த அணி திட்டவட்டம்

அரசு சமர்ப்பித்த தகவல் அறியும் சட்டமூலத்துக்கு திருத்தங்களை முன்வைத்துள்ள மகிந்த ஆதரவு அணி எம்.பிக்கள், அவற்றை அரசு ஏற்கும் பட்சத்திலேயே சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்கப்படும் என்ற தொனியில் கருத்துவெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தகவல் அறியும் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான விமல் வீரவன்ச எம்.பி., உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைந்து நடத்துமாறும் வலியுறுத்தினார்.

மக்களுக்கு தகவல் அறியும் உரிமை முக்கியம். இதன் ஊடாக ஜனநாயகம் பலமடையும் என ஒருபுறத்தில் கூறிவரும் அரசு, மறுபுறத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இழுத்தடித்து வருகின்றது.

தேர்தல் என்பது ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் என்பது அரசுக்கு ஏன் புரியவில்லை. நாட்டின் எதிர்காலத்துக்கும் பொருளாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றிய தகவல்களை பெறமுடியாத நிலை இருக்கின்றது.

அதாவது, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கையின் உள்ளடக்கங்களை அறியமுடியாது.

இந்தியாவுடன் செய்யவுள்ள உடன்படிக்கை பற்றியும் விளக்கம் இல்லை.

எனவே, ஒருபுறத்தில் தகவலுக்கு கதவு திறக்கப்பட்டாலும் மறுபுறத்தில் கதவடைப்பு இடம்பெறுகின்றது.

ஆகவே, அரசு முன்வைத்துள்ள சட்டவரைவை அப்படியே ஏற்க முடியாது. அதில் திருத்தங்கள் அவசியம். அவற்றை நாம் முன்வைத்துள்ளோம். அரசு இதற்கு சாதகமாக பதிலளிக்க வேண்டும். அப்போதுதான் எமது ஆதரவு கிடைக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

**உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்?**

இதைத் தெரிந்துகொள்ள நீங்கள் ஆர்வம் காட்டுவது உண்டா!பொதுவாக மனித இனம் இதைத் தெரிந்து கொள்ள நிச்சயம் ஆர்வம் காட்டவே செய்யும்.

மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நாமே ஊகித்து உணர முயன்றால் அது பெரும்பாலும் தவறாகவே முடியும். மற்றவர்களின் நடவடிக்கைகளை வைத்து நாம் இதை ஓரளவு ஊகித்துவிட முடியும் என்றாலும் அவர்கள் நம்மைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லும் அபிப்பிராயத்தின் மூலமாகவே இதை நன்கு உணர முடியும்.

நம்மீது விருப்போ வெறுப்போ கொண்டவர்கள் ஆயிரமாயிரம் பேசுவார்கள். அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், பாசமும் பகைமை உணர்வும் உண்மைக்கான அபிப்பிராயங்களைக் கலைத்தும் திரித்தும் கூறச் செய்யும்.

ஆனால் ஒன்று!

விருப்பம் கொண்டவர்களின் குற்றச்சாட்டுகளையும் வெறுப்புக்கொண்டவர்களின் பாராட்டுக்களையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. காரணம் அவை சத்தியமானவை.

நம்மைப் பற்றிய நம் மதிப்பீட்டை விட உலகின் மதிப்பீட்டுக்கு நாம் அதிக முக்கியத்துவம் தர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் நல்ல பல குணங்களையும் பண்புகளையும் கொண்டிருக்கலாம். ஆனால் உலகமோ நேர்மாறான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கலாம்.

இத்தகைய முரண்பாடு ஏன்?

நம் நற்பண்புகளை,குணங்களை வெளிப்படுத்துவதில் ஏதோ கோளாறு என்று பொருள்.

ஆக எண்ணங்கள் நல்லனவாயிருந்து அவற்றைப் பின்பற்றும் முறையில் கோளாறு இருந்தாலும் தவறான நினைப்புகள் மற்றவர்களிடத்தில் உண்டாகும்.

நேரடி அணுகுமுறையும் (Stright forwardness) குறைவாகப் பேசுவதும் குறைவாகச் சிரிப்பதும் நம்மைத் திமிர்பிடித்தவர்கள் என்பதான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும்.

மற்றவர்களின் புகழுரையில் மயங்கி மேலும் புகழ்பெற வேண்டும் என்பதற்காக இயல்புக்கு மாறான செயல்களைச் செய்வதும் இருக்கும் பொருட்களையும் அவற்றுக்கென இழப்பதும் இகழுரைகளைக் கேட்டு வருந்துவதும் புலம்புவதும் அவற்றில் உண்மையில்லை எனக் கண்மூடித்தனமாக மறுப்பதும் அல்லது அப்படிச் சொல்பவர்களை வெறுப்பதும் அல்லது குற்றச்சாட்டுக்குப் பயந்து ஒளிவதும் பலவீனமான மனத்தின் செயல்கள்.

இந்த உலகம் நம்மை எடை போடுவதில் மிகச்சிறந்த நீதிபதி.

எனவே நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொண்டவர்கள் தங்களைப் பற்றிய நல்லபிப்பிராயங்களைக் கேட்டு உற்சாகம் பெறவும் அதைக் காப்பாற்றிக் கொள்ளவும் தீய அபிப்பிராயங்களை ஏற்படுத்திவிட்டவர்கள் அவற்றை அழித்துத் தங்களை மாற்றிக் கொள்ளவும் முன்வர வேண்டும்.

இவற்றை விடுத்து–

யார் என்ன நினைத்தால் எனக்கென்ன? எனக்குத் தோன்றியவற்றையெல்லாம் நான் செய்வேன்,மற்றவர்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை என்று பேசும் வறட்டுப் பிடிவாதக்காரர்கள் வனாந்திரத்தில் மட்டுமே வாழ இலாயக்கானவர்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# சான்றுப்பொருட்களை உரிமை கோர முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் பலப்படுத்தப்பட்டுள்ள நீதிமன்ற சான்றுப் பொருட்களில் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சான்றுப் பொருட்களை உரியவர்கள் உரிமை கோருமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். யாழ்ப்பாணப் பொலிஸாரால் பலப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்களை வழக்கு இலக்கம் A/834/16-EPQD 4453 இலக்க நீல நிற முச்சக்கர வண்டி வழக்கு இலக்கம் 40908-NP BBK 3230 இலக்க மோட்டார் சைக்கிள் 01 என்பனவும் கோப்பாய் பொலிஸாரால் பலப்படுத்தப்பட்ட சான்றுப்பொருட்களாக வழக்கு இலக்கம் A/812/16-HUDSON வர்க்க சிவப்பு நிறப்பெண்கள் துவிச்சக்கர வண்டி 01, வழக்கு இலக்கம் A/813/16- லுமாலா வர்க்க கறுப்பு நிற இலக்கமற்ற பெண்கள் துவிச்சக்கர வண்டி 01 என்பனவாகும்.

எனவே மேற்குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோரக் கூடியவர்கள் 6 மாத காலத்திற்குள் நீதிமன்ற பதிவாளர் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் சமூகம் அளித்து பெற்றுக்கொள்ள மடியும் என நீதிமன்றப்பதிவாளர் கேட்டுள்ளார். (இ-5)



## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-24.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 145.01 | 148.81 |
| பிரிட்டன் | பவுண்ட் | 191.17 | 209.03 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 155.00 | 169.48 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 148.20 | 155.41 |
| கனடா | டொலர் | 110.62 | 116.03 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 105.04 | 112.31 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.20 | 111.06 |
| இந்தியா | ரூபா | 2.1594 | ------- |
| சீனா | யுவான் | 22.0076 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 385.1815 |
| குவைத் | டினார் | 482.9994 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8984 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7318 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5459 |



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சுன்னாகம் | கொடிகாமம் | கிளிநொச்சி | சாகச்சேரி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 75 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 500 | 600 | 600 |
| தக்காளி | 220 | 200 | 200 | 280 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 60 | 80 | 70 |
| கோவா | 200 | 200 | 130 | 200 | 140 |
| கரட் | 250 | 160-300 | 200 | 320 | 300 |
| பூசணி | 60 | 80 | 70 | 80 | 80 |
| புடோல் | 110 | 70 | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 | 140 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 250 | 180 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 70 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 160 | 110 |
| பயற்றங்காய் | 200 | 150 | 110 | 120 | 330 |
| லீக்ஸ் | -140 | 140 | 120 | 200 | 160 |
| பீற்றூட் | 140 | 140 | 130 | 200 | 180 |
| கறிமிளகாய் | 160 | 240 | 250 | 280 | 240 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 600 | 600 | 500 |
| போஞ்சி | 200 | 180 | 120 | 200 | 140 |
| கத்தரிதம்புள்ள | 130 | 60 | 50 | 80 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 200 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | — | 20-30 | 30 |
| இராசவள்ளி | 140 | — | — | 200 | — |
| வெங்காயப்பூ | 300 | 250 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 100 | — | 120 | — |
| பொன்னாங்காணி | 30 | 30 | 15 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 40 | 80 | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## அரசு-விடுதலைப்புலிகள் சமரசப்பேச்சில் முட்டுக்கட்டை 212

போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசும் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று உறுதி மொழி தர வேண்டும் என்றும் தூதுக்குழுவிடம் பிரபாகரன் கூறினார்.

**தமிழ்ச்செல்வன்**

நோர்வே தூதுக்குழுவுடன் பேச்சு வார்த்தை முடிந்த பிறகு விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன் நிருபர்களிடம் கூறியதாவது,

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்ந்து அமலில் இருக்கும் என்று நோர்வே துணை அமைச்சர் ஹெல்கேசன் எங்களிடம் உறுதி அளித்துள்ளார். வடகிழக்குப் பகுதியில் விடுதலைப்புலிகள் அரசியல் நடவடிக்கைகளைத் தொடரலாம் என்றும் அவர் எங்களிடம் கூறி இருக்கிறார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை நாங்கள் (விடுதலைப்புலிகள்) மீறமாட்டோம். அரசும் மீறாமல் இருந்தால் சமரசப்பேச்சு நடத்த தயாராக இருப்பதாக பிரபாகரன் நோர்வே தூதுக் குழுவிடம் கூறியிருக்கிறார். இப்போது கொழும்பில் நிலவி வரும் குழப்பமான அரசியல் நெருக்கடியில் சமரசப் பேச்சு தொடங்குவது கடினம். குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பிறகு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்றும் பிரபாகரன் தூதுக் குழுவிடம் கூறி உள்ளார்.

இவ்வாறு தமிழ்ச்செல்வன் கூறினார்.

**சந்திரிகா-ரணிலுடன் மீண்டும் சந்திப்பு**

பிரபாகரனைச் சந்தித்து பேசி விட்டுக் கொழும்பு திரும்பும் முன்பு நோர்வே அமைச்சர் ஹெல்கேசன் நிருபர்களிடம் கூறியதாவது,

விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையே சமரசப் பேச்சு எப்போது தொடங்கும் என்பது இன்னும் முடியவில்லை. சமரசப்பேச்சு விரைவில் நடக்க விடுதலைப்புலிகள் விரும்பினால் அதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நோர்வே அமைச்சர், தூதுகுழு உறுப்பினரும் ஹெலிகொப்டரில் கொழும்பு திரும்பினர்.

கொழும்பு திரும்பியதும் நோர்வே அமைச்சர் ஹெல்ஹெசன், சந்திரிகாவையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தனித்தனியாக சந்தித்து விடுதலை புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்களை விளக்கி கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்பட்ட மோதல் காரணமாக சமரச முயற்சியில் இருந்து நோர்வே விலகி கொண்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்த போது ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தை செயற்பட முடியாமல் முடக்கி வைத்தார். நெருக்கடி நிலையை பிரகடனம் செய்தார். ரணில் ஆதரவு அமைச்சர்களின் இலாகாக்களை பறித்தார்.

**ரணில் திரும்பினார்**

சந்திரிகாவின் நடவடிக்கைகளினால் அதிர்ச்சியடைந்த ரணில்விக்கிரமசிங்க அமெரிக்க சுற்றுப்பயணத்தை முடித்துக் கெண்டு 07-11-2003 அன்று நாட்டிற்கு திரும்பினார்.

விமான நிலையத்தில் அவர் நிருபர்களிடம் பேசுகையில்,

தான் வெளிநாடு சென்றிருந்த சமயத்தில் சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகளை கண்டித்தார்.

பாராளுமன்றத்தை முடக்கி வைத்து ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும். அப்போதுதான் பாராளுமன்றத்தைக் கூட்டி விடுதலைப்புலிகளின் சமரசம் பற்றி விரிவாக விவாதம் நடத்தி ஒப்புதல் பெற முடியும். இல்லையென்றால் அமைதிப் பேச்சு வார்த்தை கேள்விக்குறி ஆகிவிடும். என்று அவர் கூறினார்.

**நெருக்கடி நிலை ரத்து**

பிரதமர் கொழும்பு வந்த சேர்ந்த சில மணி நேரத்தில் நெருக்கடி நிலையை சந்திரிகா ரத்து செய்தார். அதாவது அவர் பிரகடனம் செய்த நெருக்கடி நிலை இரு நாட்கள் தான் அமுலில் இருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா தொலைக்காட்சியில் பேசுகையில்,

நாட்டின் நலன் கருதி தனது தலைமையில் அனைத்துக் கட்சி அரசாங்கம் அமைக்கலாம் என்று யோசனை தெரிவித்தது.

**நிராகரிப்பு**

சந்திரிகாவின் இந்த யோசனையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி நிராகரித்தது.

பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களுக்கு மீண்டும் அவர்களுடைய இலாகாக்களை கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

**சந்திரிகா பேட்டி**

இந்த நிலையில் இந்தியாவில் உள்ள தனியார் தொலைக்காட்சிகளுக்கு சந்திரிகா அளித்த பேட்டியில் கூறியதாவது,

நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கும் பிரச்சினைக்கும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கதான் காராணம். அவரது நிர்வாகத் திறமை திருப்தி அளிப்பதாக இல்லை. விக்கிரமசிங்கவுடன் எனக்கு தனிப்பட்ட விரோதம் எதுவும் கிடையாது. நாட்டில் நெருக்கடி நிலை கொண்டு வர மாட்டேன். நெருக்கடி நிலையை எப்போதுமே எதிர்ப்பவள் நான். அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நான் கருதவில்லை. இவ்வாறு சந்திரிகா கூறினார்.

**தேர்தலைச் சந்திக்கத் தயார்**

நாட்டில் திடீர் தேர்தல் வர வாய்ப்புள்ளதா? என்று கேட்டபோது அதற்கு அவர் பதில் அளித்துக் கூறுகையில், வரவாய்ப்பில்லை. ஆனாலும் அடுத்து நிகழும் நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கின்றது. தேர்தல் எப்போது வந்தாலும் அதனைச் சந்திக்க எங்கள் கட்சி தயாராக இருக்கின்றது என்றார்.





(தொடரும்)

# 2018 ற்குள் மக்களின் காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும்

## அமைச்சர் மங்கள அறிவுறுத்து



**வடக்கில் இராணுவத்தை குறைக்கும் செயற்பாடு இன்னும் முடிவடைய வில்லை. எனினும் தற்போது பொதுமக்களின் காணிகளை மீள்வழங்க ஆரம்பித்துள்ளோம். இந்த வாரம் கூட 700 ஏக்கர் காணிகளை விடுவிக்கவுள்ளோம். அத்துடன் இன்னும் 4000 ஏக்கர்கள் அளவில் இராணுவத்துடன் காணப்படுகின்ற பொதுமக்களின் காணிகளை எதிர்வரும் 2018ஆம் ஆண்டுக்குள் விடுவிக்க வேண்டுமென இராணுவத்திற்கு கூறியுள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

.நோர்வேக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒஸ்லோவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவமான தேர்தலில் நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்பட்டது. முக்கிய விடயமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கப்பட்டார்.

நாங்கள் 19ஆவது திருத்தத்தை கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்தோம். தற்போது பாராளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டு புதிய அரசியலமைப்பு வரையப்பட்டு வருகின்றது.

அத்துடன் தேசிய நல்லிணக்கம் தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. காரணம் நல் லிணக்கமின்றி எம்மால் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது. இதன் காரணமாகவே ஜெனிவா பிரேரணைக்கு நாம் இணை அனுசரணை வழங்கினோம்.

ஆனால் சர்வதேச அழுத்தத்திற்கு அடிபணிந்து நாம் பிரேரணைக்கு அனுசரணை வழங்கவில்லை. மாறாக எமது நல்லிணக்க செயற்பாடுகளுக்காகவே நாம் அனுசரணை வழங்கினோம்.

அதுமட்டுமன்றி மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய உள்நாட்டு பொறிமுறை ஒன்றை தயாரித்து வருகின்றோம். தற்போது காணாமற் போனோர் குறித்து ஆராய்வதற்கான நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தென்னாபிரிக்காவுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

இலங்கையில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி தேவைப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் நாங்கள் விசேட நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண்டியுள்ளது. இதன் போது சர்வதேச பங்களிப்பு குறித்து கேள்வி எழுப்பப்படுகின்றது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடி அரசாங்கம் தீர்மாணம் எடுக்கும். எவ்வாறாயினும் இந்த விசேட நீதிமன்றமானது தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பேச்சு நடத்தப்பட்டே நிறுவப்படும் என்பதை கூறுகின்றோம்.


மேலும் நான் அடுத்த வாரம் ஜெனிவாவுக்கு விஜயம் செய்து இலங்கை சார்பில் அமர்வில் உரையாற்றவுள்ளதுடன் எமது நாட்டின் முன்னேற்ற நிலைமை குறித்து விளக்கமளிக்கவுள்ளேன்.

ஜெனிவா பிரேரணை பரிந்துரைகளை பயன்படுத்துவதற்கு நாம் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துகின்றோம். இது சர்வதேசத்தின் அழுத்தத்தினால் செய்யப்படுவதல்ல. மாறாக எமது நாட்டுக்காக செய்கின்றோம்.


எமது நாட்டையும் இராணுவத்தையும் மக்களையும் பாதுகாக்க ஜெனிவா பிரேரணை பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த தன்னம்பிக்கையுடன் நாம் முன் செல்வதுடன் சவால்களை எதிர்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 761

அச்சு



தர்ஷன்




றாதை




றாதை




தனுஷன் ராஜ்




தனுஷன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஈழத்தமிழருக்கு குடியுரிமை வழங்க இந்தியா பின்னடிப்பது ஏன்?



தமிழ்நாட்டிலுள்ள முகாம்களில் தங்கியிருந்த ஈழத்தமிழர்கள் பலர் தமது வாழ்வு சிறக்கும் என்ற வாக்குறுதிகளின் மத்தியில் அவுஸ்திரேலியாவை நோக்கிப பயணிககின்றனர். இவ்வாறு அவுஸ்திரேலியா நோக்கி ஜூன் 2 ஆம் திகதி புறப்பட்ட ஈழத் தமிழர்கள் 28 பேர் தமிழ்நாடு கரையோர பொலிஸாரால் வழி மறிக்கப்பட்டனர்.

இவர்கள் தமக்காகக் காத்திருந்த படகை நோககிச் சென்று கொண்டிருந்தபோதே வழிமறிக்கப்பட்டனர். இவர்கள் தமது படகில் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணமாகியிருந்தால் செல்லும் வழியில் ஆழ்கடலில் படகு கவிழ்ந்து இறந்திருக்கலாம் அல்லது அவுஸ்திரேலியாவுக்கு வெளியேயுள்ள தீவுகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்பதை கடந்த கால சம்பவங்கள் சுட்டி நிற்கின்றன. ஆகவே இவர்கள் இந்தியக் கரையில் வைத்து கரையோரப் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டதானது நல்லதொரு வாய்ப்பாகும்.

இலங்கைக்குத் திரும்புவதற்குத் தயக்கமுறும் ஈழத் தமிழ் அகதிகளை தமிழ்நாட்டு முகாமகளில் காணப்படும் வசதிக் குறைபாட்டைப்பயன படுத்தி அவரகளை அங்கிருந்து கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்வதற்கான வாக்குறுதிகளை உள்ளூர் மற்றும் இலங்கையைச்சேர்ந்த ஆட்கடத்தல் முகவர்கள் மேற்கொள்வதாக தமிழநாட்டைச் சேர்ந்த மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆட்கடத்தல்களில் ஈடுபடும் முகவர்களுக்கு அவுஸ்திரேலியாவிற்குப் பயணிக்கும் ஒவ்வொருவரும் இந்திய ரூபாய் ஒரு இலட்சத்தைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும் என அகதிகளின் நலன்களில் கவனம் செலுத்தும் செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவிலுள்ள முகாம்களைச் சென்றடைந்த பின்னர் அகதி நிலை பெற்றுக் கொடுக்கப்படும் என ஆட்கடத்தல்காரர்கள் உறுதியளிக்கின்றனர்.

ஜூன் 02 ஆம் திகதி, அகதி முகாம்களைச் சேரந்த 28 பேர், தமிழ்நாட்டிற்கும் ஆந்திர பிரதேசத்திற்கும் இடையிலுள்ள புலிக்கற்வாவி நோக்கி இரண்டு வான்களில் பயணித்தபோதே கரையோர பொலிஸாரால் வழிமறிககப்பட்டனர். 28 ஈழத் தமிழ் அகதிகளும் வான் சாரதிகள் இருவரும் முகவரும் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அவர்களது முகாங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

'ஆட்கடத்தல் முகவர்கள் சிலர் அகதிகளிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர்கள் தமது படகிற்குச் செல்லும் வழியில் பொலிஸாருக்குத் தகவலை வழங்கி அவர்களை வழிமறிப்பதற்கான தந்திரத்தை உபயோகிக்கினறனர் என சந்தேகம் ஏறபட்டுள்ளது என தமிழ்நாட்டு அகதி முகாங்களில் வாழும் மக்களுக்கான புனர்வாழ்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் OfERR எனும் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.சி.சந்திரகாசன் தெரிவித்தார்.



இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா நோக்கிய கடல்வழிப் பயணமானது 2002இல் ஆரம்பமானது. இலங்கையிலிருந்தும் சில படகுகள் அவுஸ்திரேலியாவை அடைந்துள்ளன. இவர்களில் 200 வரையானவர்கள் அவர்களது படகுகள் அலைகளில் சிக்குண்டதால் இறந்துள்ளனர்.

கிறிஸ்மஸ்தீவை அடைந்த 1,600 வரையான மக்கள் நெளரு மற்றும் பப்புவா நியுகினியாவிலுள்ள தடுப்பு முகாங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அத்துடன் சிலர் அவர்களது சொந்த நாட்டிற்குத்திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டு அகதி முகாங்களிலிருந்து 2008 தொடக்கம் இவ்வாறான கடல்வழிப் பயணங்கள் மூலம் அவுஸ்திரேலியா பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களுள் 400 வரையானோர் மலேசியா அல்லது அந்தமான்தீவுகளில் வைத்து இடைமறிக்கப்பட்டனர்.

இவ்வாறு இடைமறிக்கப்படும் அகதிகள் அறிவுறுத்தப்பட்டு மீண்டும் அவர்கள் தங்கியிருந்த முகாங்களுக்கு அனுப்பப்படுவர். இவர்களுக்கு எதிராக எந்தவொரு வழக்குகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. ஆட்கடத்தல் முகவர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்ட போதும் அவர்கள் அங்கிருந்து தப்பிவிட்டனர்.

தமிழ்நாட்டு பொலிஸார் மற்றும் இந்தியக் கரையோரப பொலிஸாரின் கண்காணிப்பின் மூலமே இவ்வாறான ஆட்கடத்தல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சந்திரகாசன் தெரிவித்தார். தனது நிறுவனமும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து மக்கள் மத்தியில் இவ்வாறான கடல்வழிப் பயணங்களின் ஆபத்துக்கள் மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கமானது இதனை ஒருபோதும் வரவேற்காது போன்ற பலவேறு விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கி வருக்கின்றன.

'கடல்வழியாக அவுஸ்திரேலியாவிற்குத்தப்பிச் செல்லும் புகலிடக்கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் அவுஸ்திரேலியாவல்தங்குவதற்கான அனுமதி வழங்கப்படமாட்டார்கள்' என அவுஸ்திரேலியாவின் துணைத் தூதுவர் சீன் கெலி அண்மையில்சென்னையில்வைத்து ஊடகங்களிடம் தெரிவிததிருந்தார்.

'அவுஸ்திரேலியாவைச் சென்றடையும் அனைவரும் நெளரு மற்றும் பப்புவா நியுகினியிலுள்ள மனுஸ் தீவுகளுக்கு அனுப்படுவர்எனவும்துணைதூதுவர் தெரிவித்தார்.

நாட்டின் உச்ச நீதிமன்றின் அறிவித்தலின் பிரகாரம் மனுஸ் தீவிலுள்ள அகதி முகாமை மூடவுள்ளதாக பப்புவா அரசாங்கம் அண்மையில் அறிவித்தல் மேற்கொண்டதாக சந்திரகாசன் தெரிவித்தார். இந்நிலையில் இந்த முகாமிலுள்ள 1200 அகதிகளுக்கு என்ன நடக்கும் என்பது உறுதியற்றது என சந்திரகாசன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் 107 அகதி முகாம்களில் 102,055 ஈழத்தமிழ் அகதிகள் வாழ்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாதத்திற்கு 20 கிலோ அரசி வழங்கப்படுவதுடன், பிரதானமான பொருட்கள் நிவாரண அட்டை மூலம் வழங்கப்படுகிறது. அத்துடன் தரம் ஏழுவரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது.

1990களில் தமிழ் நாட்டிற்கு வந்த பெரும்பாலான ஈழஅகதிகள் கல்வி கற்று திருமணம் செய்து பிள்ளைகளுடன் வாழ்கின்றனர்.

மறுபுறத்தே, நெளரு மற்றும் பப்புவா முகாங்களில் அடிப்படை வசதிகள் காணப்பட்டாலும் கூட, வெளியில் செல்வதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது. மனுஸ தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் அங்குள்ள உள்ளூர் மக்களுடன் கூடத் தொடர்பைப் பேணமுடியாத நிலை காணப்படுகிறது.

2009இல் இலங்கையல் உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு வந்த போதிலும், தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்குப் பலர் தயங்குகின்றனர். தமது வாழ்வாதரத்தைக் கொண்டு நடத்த முடியாது என்பதே அவர்களது கருததாகும்.

2002 தொடக்கம் 2014 வரையான காலபபகுதியில் 12,500 வரையான ஈழத்தமிழ் அகதிகள் தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கு ஐ.நா. அகதிகள் உயர்தானிகராலாயத்தின் இந்தியக் கிளை உதவியுள்ளது. இவ்வாண்டு இதுவரை 315 அகதிகள் இலங்கைக்குச் சென்றுள்ளனர்.

இந்தியாவில் வாழ விரும்பும் ஈழத்தமிழ் மக்களுக்கு குடியுரிமையை வழங்குமாறு தி.மு.க மற்றும் அ.இ. அ.தி.மு.க போன்றன தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றன. ஆனால் இந்திய மத்திய அரசாங்கமானது இக கோரிக்கையை ஏற்பதறகுத்தயங்குகிறது. ஏனெனில்இதுபோன்றே பங்களாதேசில் இருந்து அசாமில் குடியேறியுள்ளவர்களும்குடியுரிமை வழங்குமாறு கோரலாம என்பதே இந்தியா ஈழத்தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்குப் பன்னடிப்பதற்கான காரணமாகும்.

வழிமூலம் - The Telegraph
ஆங்கிலத்தில் - G.C. Shekhar
மொழியாக்கம்- நித்தியபாரதி

# புதிய நவீன அடையாள அட்டையில் மும்மொழிகளும் இருக்கவேண்டும்

## டக்ளஸ் எம்.பியின் கோரிக்கைக்கு அரசு ஒப்புதல்

தேசிய அடையாள அட்டை இலத்திரனியல் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரையை அரசாங்கம் முன்வைத்திருப்பதை வரவேற்கின்றேன். அதேவேளை தற்போது தமிழ் பேசும் மக்களின் அடையாள அட்டைகளில் தமிழிலும், சிங்களத்திலும் எழுதப்பட்டிருக்கின்றது.

ஆனால் சிங்கள மக்களின் அடையாள அட்டைகளில் தனியே சிங்கள மொழியில் மட்டுமே இருக்கின்றது. இந்த நிலைமை மாறவேண்டும். புதிதாக அடையாள அட்டையை இலத்திரனியல் அட்டையாக மாற்றம் செய்யும்போது, அதில் தமிழ், சிங்களம் மொழிகளுடன் ஆங்கிலத்தையும் உள்ளடக்க வேண்டும்.

அத்தகைய பன்மைத்துவம் ஏற்படுத்தப்படுகின்ற போதுதான் தேசிய நல்லிணக்கம் பலப்படுத்தப்படும். ஆங்கிலம் உள்ளடக்கப்பட்டால் எமது மக்கள் வெளிநாடுகளுக்கு செல்லும்போது தேவையேற்படுமிடத்து அடையாள அட்டையை உறுதிப்படுத்த வசதியாக இருக்கும் என்று டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக பிரதமர் தெரிவித்தார். தற்போது பதினாறு வயது நிரம்பியவர்களே அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்தவர்களாக கருதப்படும் வயதெல்லையானது எதிர்காலத்தில் பதினைந்து வயதாக குறைக்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் 22.06.2016 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

கடந்த காலத்தில் யுத்தம் காரணமாக தமிழ் மக்கள் இடப்பெயர்வுகளையும், ஆவண ரீதியான பதிவுகளையும் முறையாகப் பின்பற்றவில்லை.

ஆகையால் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதிலும், தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்வதிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பல்வேறு நன்மைகளை தமிழ் மக்கள் இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், வாக்காளர் எண்ணிக்கை குறைவு காரணமாக நாடாளுமன்ற உறுப்புரிமைகளையும் இழக்கும் ஆபத்தையும் எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

எனவே தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்பதுடன், தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்வதையும் அக்கறையோடு செய்யவேண்டும் என்றும் இவ்விடயத்தில் கிராம சேவையாளர்களுடன் இணைந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களும், மக்களுக்கு தேவையான உதவிகளையும், விழிப்புணர்வையும் வழங்குவார்கள் என்றும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தெரிவித்தார். (இ-10)

# சீமெந்து விநியோகத்தில் மோசடி கூட்டுறவு ஆணையரிடம் விளக்கம் கோரப்படும்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத் துறையில் சீமெந்து விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் தொடர்பில் வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை ஆணையாளரிடம் விளக்கம் கோரப்படும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். குறித்த முறைகேடு தொடர்பில் வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட ப.அரியரத்தினம், விந்தன் கனகரத்தினம், க.சிவனேசன் ஆகியோர் கொண்ட குழு நேற்று முன்தினம் அறிக்கை சமர்ப்பித்து இருந்தது. இது தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விசாரணைக்குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது, சங்க சட்ட நடைமுறைகள் என்பவற்றை ஆராய்ந்து இந்த விநியோக நடைமுறையானது முறைகேடான நடைமுறை என கருதி பின்வரும் பரிந்துரைகளை சபைக்கு பரிந்துரைக்கின்றது.

01. சமாசத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீமெந்து விநியோகம் கடன் அடிப்படையிலும் பிற் திகதியிடப்பட்ட காசோலைகள் மூலமுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க விதிகளின்படி கடன் விற்பனை செய்வதோ பிற் திகதியிடப்பட்ட காசோலைகளை ஏற்றுக் கொள்ளப்படுவதோ தவறான நடவடிக்கை ஆகும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு கடன் விற்பனை செய்வதற்கு இயக்குநர் சபையின் அனுமதி பெறப்பட்ட போதும் மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

அத்துடன் காசோலைகள் அங்கீகரிக்கப்பட்ட சமாசத்தின் பெயரில் எழுதப்படாது ரொக்கம் எனக் குறிப்பிடப்பட்டு எழுதுவதும் கூட்டுறவு விதிகளுக்கு முரணான செயற்பாடாகும்.

மேற்படி சமாசத்தின் உப விதிகளின் கடனுக்கு பொருட்கள் விற்பனை செய்வது பற்றியோ குறித்த முகவர்களுக்கு விநியோகம் செய்வது பற்றியோ குறிப்பிடப்படவில்லை. மேற்படி முகவர்களுக்கு கடன் விற்பனை மூலம் வழங்கப்பட்ட சீமெந்தின் பெறுமதிக்கு முகவரால் வாங்கப்பட்ட காசோலைகள் பணம் இல்லை என வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டவுடன் அது பற்றி சமாசத் தலைவருக்கும் பொலிஸ விசேட மோசடிப் பிரிவுக்கும் அறிவித்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்து அந்தக் குறித்த தொகையை அறவிடுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் மீண்டும் பிற் திகதியிடப்பட்ட காசோலைகளைப பெற்றுக் கொண்டு சீமெந்து விநியோகம் மேற்கொள்ளப்பட்டு அவையும் மீண்டும் மீண்டும் தொடர்சியாக வங்கியில் பணம் இல்லை என திருப்பி அனுப்பிய நிலையிலும் அவற்றுக்கும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்காமல் பெருந்தொகையான பணம் ரூபா 2,914,500 ரூபா நட்டம் ஏற்படக் காரணமாக இருந்துள்ளார்.

தற்போது சீமெந்து வாங்கியவர்கள் காசோலையை வழங்கிவிட்டு தொடர்பு கொள்ள முடியாதவாறு தலைமறைவாகியுள்ளனர்.

இவ்வாறான விநியோகம் பற்றி பொதுமக்களது முறைப்பாடுகள் முறைப்பாட்டுக் குழுவிற்கு கிடைத்த காரணத்தினால் முகாமையாளர் காலம் தாழ்த்தி நீதிமன்ற நடவடிக்கையை நாடியுள்ளார். குறித்த காசோலைகள் தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸ் விசேட மோசடிப் பிரிவுக்குள்ளால் குற்றவியல் சட்டத்தின்கீழ் வழக்கைப் பதிவு செய்யாமல் காசோலை வழங்கியவர்களில் ஒருவரான திருமதி ஜெசிந்தா றஜீவன் என்பவருக்கு மட்டும் 1,044,000 ரூபா சிவில் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

இதனால் இந்த விசாரணை நீண்ட காலத்துக்கு தாமதம் ஆவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்த 2,914,500 ரூபாவுக்குரிய சீமெந்தை சரியான முறையில் விநியோகித்து சமாசத்துக்கான வருமானத்தை ஈட்டியிருந்தால் இன்னும் வியாபாரத்தைப் பெருக்கி சமாசத்துக்கான வருமானத்தை அதிகரித்திருக்கலாம். அல்லது குறித்த தொகையை வங்கியில் வைப்பில் இட்டிருந்தால் கூட முதலுடன் கூடிய கணிசமான இலாபமும் சங்கத்துக்குக் கிடைத்திருக்கும். எனவே கூட்டுறவு சமாச முகாமையாளரது இத்தகைய செயலானது சமாசத்துக்கு தொடர் நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சீமெந்து கடன் விற்பனையில் சமாசத்தின் முகாமையாளரும் இயக்குநர் சபையினருமே இந்த நட்டத்தை பொறுப்பேற்க வேண்டும்.

02. குறித்த சீமெந்து விநியோகம் தொடர்பாக முகாமையாளரே சகல முடிவுகளையும் தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளார். கடன் விற்பனைக்கான அனுமதியை இயக்குநர் சபை பெற்ற போதிலும் இந்த விநியோகம் அங்கீகரிக்கப்பட்ட முகவர் அல்லாதோருக்கும் தன்னிச்சையாக விற்பனை செய்துள்ளார். இத்தகைய விநியோகம் பற்றி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அங்கீகாரமும் தகவலும் தரப்படவில்லை. இதனால் இது ஒரு அதிகார துஷ்பிரயோகம் ஆகும். இந்த நிலையில் குறித்த சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பான சமாச முகாமையாளர் உடனடியாக பணி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

03. சமாசத்தின் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளில் உள்ளடக்காது கடன் விற்பனைக்கு அனுமதி அளித்த இயக்குநர் சபையையும் கலைக்கப்பட வேண்டும்.

04. பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்தின் மூலம் சமாசத்தின் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொண்ட முகாமையாளரின் செயற்பாட்டால் சங்கத்துக்கு 2,914,500 ரூபா முதலும் இன்றுவரையான வட்டியும் இழப்பீடாக ஏற்பட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளும் சமாசத்தின் பணமே மேலதிகமாக விரயமாகிக்கொண்டிருக்கின்றது. இதனால் சங்கத்துக்கு ஏற்பட்ட சகல நட்டங்களும் முதலும் வட்டியுமாக முகாமையாளரிடம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# செய்தித்துளிகள்

## இருட்டறை குறும்படம் வெளியீடு

கிருத்திகனின் இயக்கத்தில் இலங்கையில் பெண்களுக்கெதிரான வன்முறைகளில் உள்ள சைபர் க்ரைம் சட்டத்தின் குறைபாடுகள் பற்றிய விழிப்புணர்வை கருப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இருட்டறை என்ற குறும்பட வெளியீடு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும். (இ-5)

## யாழ்.கல்வி வலயம் நடத்தும் சமூக விஞ்ஞானப் போட்டி

யாழ்.கல்வி வலயம் நடத்தும் சமூக விஞ்ஞானப் போட்டி இன்று காலை 8 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். இப்போட்டியில் யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 6 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் பங்குபற்ற முடியும் என யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.அகிலதாஸ் அறிவித்துள்ளார். (இ-5-136)

## சுரங்க பணியாளர்கள் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டம்

குருணாகலை, கஹட்டகஹ காரீய சுரங்கத்தில் பணியாற்றும் பணியாளர்கள் சிலர் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர். நாளாந்த ஆபத்து கொடுப்பனவை 400 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. காரீய சுரங்கத்தினுள் இருக்கின்ற 40இற்கும் அதிகமான பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-10)

## குளிர்சாதன பெட்டியின் காற்று அழுத்தி வெடிப்புக்குள்ளானதில் ஒருவர் மரணம்

மாரவில முதுகடுவ பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில், குளிர்சாதன பெட்டியை பழுது பார்த்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட்ட வெடிப்பு சம்பவம் ஒன்றினால் ஒருவர் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

குளிர்சாதன பெட்டியின் காற்று அழுத்தி வெடித்தமையினால் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குளிர்சாதன பெட்டியினுள இருக்கும் காற்று அழுத்தி வெடிப்புக்குள்ளானதன் பின்னர், குறிப்பிடப்பட்ட நபர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதனை தொடர்ந்து உயிரிழந்துள்ளார். (இ-10)

## மஹா கும்பாபிஷேகம் நாளை

கைதடி அருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் கோவில் முதலாய கோயில்களின் புனராவர்த்தன நவகுண்ட பஞ்ச குண்ட பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் 7.25 வரையான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும். கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து எதிர்வரும் 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளதாக ஆலய திருப்பணிச்சபையினர் மற்றும் நம்பிக்கை பொறுப்பாளர் சபையினர் அறிவித்துள்ளனர். (இ-246)

## கலாசாரப் பேரவையின் வருடாந்தக் கூட்டம்

யாழ்.காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. காரைநகர் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமாகிய திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படவுள்ளதால் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு காரைநகர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ-246)

## இளைஞர் விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வுகள் நாளைமறுதினம்

யாழ். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 28வது மாவட்ட மட்ட இளைஞர் விளையாட்டுப்போட்டியின் இறுதிநிகழ்வுகள் நாளை மறுதினம் 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி இமையாணன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இவ் இறுதி நிகழ்வில் சங்கானை மற்றும் கரவெட்டி உதைப்பந்தாட்ட அணிகள் மோதவுள்ளன. மேலும் கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் அணிகளும் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மற்றும் கரவெட்டி அணிகளும் மோதவுள்ளன. (இ-9)

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்.காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## 191 சிவாஜிகணேசன் திருப்பதிக்குச் சென்றதால் ஏற்பட்ட பிரச்சினை

உடனே நான் சேலத்தில் இருந்து புறப்பட்டு மாலை 4 மணிக்கெல்லாம் சென்னை வந்து விட்டேன். விழாவிற்காக என்னை கூப்பிடுவார்கள் என்று காத்துக்கொண்டிருந்தேன். யாரும் என்னைக் கூப்பிடவில்லை.


மாலை 6 மணியளவில் தொடங்கிய பாராட்டுக் கூட்டத்தில் முதன்முதலாக எம்.ஜி.ஆரைக் கூட்டிச் சென்று மேடையில் ஏற்றி கௌரவித்தார்கள். அதிகமாக நிதி வசூலித்தவன் நான்தான். ஆனால் எம்.ஜி.ஆரை கூட்டத்தில் ஏற்றி பாராட்டுகிறார்கள்.

எங்கே கணேசன் வரவில்லையா? என்று அண்ணா கேட்டிருக்கிறார்கள். இல்லை கணேசன் வர முடியவில்லை என்று சொல்லிவிட்டார். என்று அண்ணாவிடம் சிலர் கூறியிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி என்னை பாதித்தது. பைத்தியம் பிடித்தவன் போல் ஆகிவிட்டேன்.

அண்ணன் எம்.ஜி.ஆருக்கும் கட்சிக்கும் அப்போது சம்பந்தமே கிடையாது. சின்னப்பிள்ளையில் இருந்து அந்த இயக்கத்தில் ஒட்டிக் கொண்டிருந்தவன் நான். என்னை ஒதுக்கி வைப்பதற்காகத்தான் இவ்வாறு செய்தார்கள். இதுதான் உண்மை.

**பீம்சிங் அழைப்பு**

நான் பல நாட்கள் வருத்தமாக இருந்தேன். ஒரு நாள் என் நெருங்கிய நண்பரான இயக்குனர் பீம்சிங் வந்தார். சிவாஜி! ஏன் தலையில் கை



வைத்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கின்றீர்கள். திருப்பதிக்குப்போய் வரலாம் வாருங்கள் என்று அழைத்தார்.

நான் கோவிலுக்கு அதி கம் போனதில்லை. ஆனால் பீம்சிங் படிவாதமாக கூப்பிட்டு திருப்பதிக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

திருப்பதி கோவிலில் அதிகாலை 4 மணிக்கு விஷ்வரூப தரிசனம் என்று ஒரு தரிசனம் உண்டு. அதைப் பார்த்து விட்டுத் திரும்பினோம். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு திருப்பதி கணேசா, கோவிந்தா என்றெல்லாம் எழுதினார்கள். எனக்கு ஒரு புகழிடம் தேவைப் பட்டது. ஒரு வழிகாட்டியைத் தேடினேன். அப்போது எனக்கு ஒருவர் கிடைத்தார். அவர் தான் பெருந்தலைவர் காம ராஜர். அவருடன் சேர்ந்தேன் அவரைத்தலைவராக ஏற்றுக் கொண்டேன்.

இந்த நிகழ்ச்சியால் எனது திரைப்பட வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. திருப்பதி கணேசா, கோவிந்தா என்று சிலர் கேலி செய்த நேரத்தில் திருப்பதி ஏழு மலையான் கண்விழித்துப் பார்த்து அருள் புரிந்து விட்டார்.

இதன் பிறகுதான் நான் ஸ்டுடியோவிலேயே 24 மணி நேரமும் தங்கி மூன்று ஷிப்டாக வேலை செய்தேன். பெற்றோரை, மனைவியைப்பார்க்க முடியவில்லை. குழந்தைகளைப் பார்க்கவில்லை. ஸ்டுடியோவிற்கு உள்ளேயே இருந்தேன்.

நான் நடித்த படங்கள் எல்லாம் மாபெரும் வெற்றிப் படங்களாக அமைந்தன. மக்கள் பாராட்டைப் பெற்று விருதுகள் வாங்கித் தந்தன.

இவ்வாறு சிவாஜி கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதன் முதலாக வட்டாரத் தமிழ் ஒலித்த படம் மக்களைப் பெற்ற மகராசி. அதில் சிவாஜிகணேசன் கொக்கு நாட்டுத்தமிழ் பேசி புதிய சாதனை படைத்தார்.

1956 இல் அமரதீபம், பெண்ணின் பெருமை, ராஜ ராணி, ரங்கூன்ராதா, நல்ல வீடு, நான் பெற்ற செல்வம், நானே ராஜா, வாழ்விலே ஒரு நாள், தெனாலி ராமன் ஆகிய 9 படங்களில் சிவாஜி நடித்தார்.

**அமரதீபம்**

வீனஸ் பிக்சர்ஸ் தயாரிப்பான அமர தீபம் மிகப் பெரிய வெற்றிப்படம்.

இதன் கதை-வசனத்தை ஸ்ரீதர் எழுதினார். டி.பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்தார். சிவாஜியுடன் பத்மினியும் சாவித்திரியும் இணைந்து நடித்தனர். கதை, நடிப்பு, இசை எல்லாமே சிறப்பாக இருந்ததால் இப்படம் 200 நாட்கள் ஓடியது.

(அமர தீபத்தை பின்னர் சிவாஜிகணேசன் இந்தியில் அமரத் தீப் என்ற பெயரில் சொந்தமாகத் தயாரித்தார். அதில் தேவ்ஆனந்த், பத்மினி, வைஜயந்திமாலா, ஆகியோர் நடித்தனர்.)

(தொடரும்)

# ஜனநாயகத்தை பலப்படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்தவே தகவல் அறியும் சட்டமூலம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

தகவல்கள் மூடி மறைக்கப்பட்டதாலேயே கடந்த காலங்களில் ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடியதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தைப் பலப்படுத்துவதற்கும், நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கும் தகவல் அறியும் சட்ட மூலத்துக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தகவல் அறியும் சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டு தகவல் அறியும் சட்டவரைபை ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான அரசாங்கம் சமர்ப்பித்திருந்த நிலையில், 2004 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அதனை நிறைவேற்றுவதில் தடையை ஏற்படுத்தியது.

எனினும், இந்த முயற்சியை ஐக்கிய தேசியக் கட்சி கைவிடவில்லை எனவும் பலவழிகளிலும் அதற்கு நடவடிக்கை எடுத்த அதே வேளை, சிவில் அமைப்புகளும் இதுதொடர்பில் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஆட்சியில் இருந்தவர்களின் அக்கறையின்மையால் கடந்த 10 வருடங்களுக்கு இந்த சட்டமூலம் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

21 ஆம் நூற்றாண்டில் தகவல் அறிதல் என்பது மக்களுக்குள்ள மிகமுக்கிய உரிமை எனவும், அந்த உரிமை கடந்தகாலங்களில் மறுக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு தகவலையும் மக்கள் உரிய வகையில் அறிந்து வைத்திருக்கவில்லை எனவும், ஊழல் மோசடிகளை மூடிமறைப்பதற்காகவே மேற்படி சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட போதெல்லாம் தடுக்கப்பட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த தேசிய அரசின் கீழ் அந்த உரிமையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் நிறைவேறினாலும், அதை உரிய வகையில் நடைமுறைப்படுத்துவதறகு ஒரு வருடம் தேவைப்படும் எனவும், தற்போது நான்காயிரம் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கையை உரிய வகையில் முன்னெ



டுப்பதற்கு 12 ஆயிரம் வரை ஊழியர்கள் தேவைப்படுவதாகவும், இவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தையும், மக்களின் உரிமைகளையும் கருத்திற்கொண்டு கொண்டுவரப்பட்ட சட்டவரைபே இதுவெனவும், கருத்து வேறுபாடு காணப்பட்டாலும், அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மோதல் இடம்பெற்ற அவிசாவளைக்கு அமைச்சர் மனோ கணேசன் விஜயம்

அவிசாவளை, புவக்பிடிய, வெருளுபிடிய பிரதேச, புதுக் குடியிருப்பு கிராமத்தில் இடம் பெற்றுள்ள தமிழ், சிங்கள இளைஞர் மத்தியிலான மோதலினால் பதட்ட நிலைமை உருவாகியுள்ளது.

பதட்ட நிலைமை ஏற்பட்ட இடத்துக்கு நேற்று முன் தினம் நேரடியாக ஸ்தலத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் மனோ கணேசன், நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இயல்பு நிலைமையை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை நேரடியாக கண்காணித்து முன்னெடுத்தார்.

அமைச்சரின் பணிப்புரையின்படி அவிசாவளை பொலிஸ பிரிவு உள்வரும் பிரதி பொலிஸ்மா அதிபர் ரோஹான் டயஸ் விவகாரத்தை நேரடியாக பொறுப்பேற்று பிரதேசத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த அமைச்சர் மனோ கணேசன் காயமடைந்தவர்களையும் பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் உத்தர வாதம் அளித்தார்.

சம்பவ இடத்துக்கு அவிசாவளை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி சீஜசேன நாயக்கவை நேரடியாக வரவழைத்து, தமிழ் மக்களுடன் கலந்துரையாட செய்து, மேல் நடவடிக்கைகள் தொடர்பில் உரிய பணிப்புரைகளை அமைச்சர் மனோகணேசன் விடுத்துள்ளார்.

பிரதேசத்தில் தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்று காலை வரை பிரதான சந்தேகநபர் உட்பட நான்கு பெருமபான்மை இன சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இன்னும் 10 பேர் வரை தேடப்பட்டு வருகின்றனர் என அவிசாவளை தலைமையக பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு அமைச்சருடன், ஜமமு கண்டி மாவட்ட எம்பி வேலு குமார், கொழும்பு மாவட்ட ஜமமு மேல்மாகாணசபை உறுப்பினர் குருசாமி, ஜதொகா செயலாளர் சண் பிரபாகரன், கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சசிகுமார் ஆகியோரும் உடன் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் மனோகணேசன் மேலும கூறியுள்ளதாவது,

அவிசாவளை புவக்பிடிய புதுக்குடியிருப்பு பிரதேசத்தில நேற்று முதல்நாள் இரவு நடைபெற்ற இந்த வன்முறை தொடர்பில், கைது செய்யப்படுபவர்களுக்கு பிணை வழங்க எக் காரணம் கொண்டும் பொலிஸ் உடன்படக்கூடாது என அவிசாவளை பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி சீஜ சேனநாயக்கவிடம் கண்டிப்பாக கூறியுள்ளேன்.

பிரதான சந்தேக நபர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னமும் சுமார் பத்து பேர் தேடப்படுகின்றனர். சம்பவத்தில் காயமடைந்த தமிழ் இளைஞரகளில் மூவர் அவிசாவளையிலும, இருவர் கொழும்பிலும் மருத்துவ சிகிச்சை பெறுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

மேன்மைக்குரிய அனைத்து சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப் பட்டவையே! – ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழன் வீழ்ந்தது எழுவதற்காக என்று சங்கே முழங்கு

பத்தாவது தடவையாக வீழ்ந்தவனை பார்த்து நிலமகள் சொல்கிறாள். மகனே! நீ ஒன்பது தடவைகள் எழுந்து நின்றவன் என்று.

எனவே வீழ்வதென்பது வீழ்ந்து போவதற்கா? அல்லது எழுந்து நிற்பதற்கா? என்பதை வீழ்கின்றவர்களே தீர்மானிக்க வேண்டும்.

நாங்கள் வீழ்த்தப்பட்டவர்கள் சொந்த நாட்டில் சர்வதேசத்தின் உதவியோடு எங்கள் பலம் அடக்கப்பட்டது.

தமிழனை இப்படியே வளர விட்டால் அவன் வல்லரசு நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடுவானோ என்ற ஏக்கத்தில் உலக நாடுகள் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுத்து தமிழனை வீழ்த்தின.

வீழ்ந்த தமிழன் எழுந்து விடுவானோ? என்ற ஏக்கத்தில் எத்தனையோ நாசங்கள் செய்யப்பட்டன.

கூடவே உலக நாடுகள் உதவி என்ற பெயரில் எங்களை கையேந்த வைக்கும் கலாசாரத்திற்குள் வலிய இழுத்துவந்து எங்கள் இனத்தை சோம்பேறித்தனமாக்க எடுத்த நரித் தந்திரங்களும் எங்கள் எழுகை மேல் விழுந்த பாரம் என்பதை உணர முடியும்.

இதற்கு மேலாக போராட்டத்தின் பரிணாமத்தில் முப்படைத்தளத்திலும் சாதனை படைத்த தமிழன் வீழ்த்தப்பட்டாலும் அவன் வீழ்ந்து கிடப்பது பலமாக எழுவது எப்படி என்று சிந்திப்பதற்காகவே எனப் பயந்த இலங்கை ஆட்சியாளர்கள் எப்படி எல்லாம் தமிழினத்தை வேதனைப்படுத்தி வேரறுக்க முடியுமோ அந்தளவுக்கு உச்சமாக செயற்பட்டனர்.

தவிர, தமிழர்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் வெட்டிச் சரிக்கப்பட வேண்டும். இனி ஒரு விடுதலைப் போராட்டம் பற்றி தமிழன் இம்மியும் நினைக்கலாகாது என்று உறுதிப்பட நினைத்தவர்கள் எங்கள் இளம் சமூகத்தை–மாணவ குழுமத்தை பிறழ்வான பாதைக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

இவை எல்லாம் நடந்து கொள்கின்ற போதிலும் எங்கள் இனத்தை எப்படியும் மீட்க வேண்டும்; எங்கள் உடன் பிறப்புக்கள் வாழ வேண்டும்; நாங்கள் மீளவும் எழவேண்டும் என்று நினைக்கின்ற பேருள்ளங்கள் பல் வழிகளிலும் எம் இனத்தைக் காப்பாற்ற படாப்பாடு படுகின்றனர்.

தமிழினத்தை சிதைப்பது என்ற முடிவில் உறுதியாக இருக்கும் பாதகர்களை வெற்றி கொள்வதற்காக நாம் பெரும் தியாகங்களைச் செய்யவேண்டும்.

அதில் ஒன்று வீழ்ந்த எம் இனம் எழ வேண்டும். வீழ்ந்தவன் என் சகோதரன் என்பதால் நானே கைகொடுத்து அவனைத் தூக்கி விடுவதுதான் என் இனத்துக்கு மதிப்பு என்று உணர்ந்து உதவுவது உலகுவாழ் முழுத் தமிழர்களினதும் கடமை.

இந்தக் கடமை இன்று மெல்லமெல்ல நடந்து கொண்டிருக்கிறது.

தனி ஒரு மனிதன் வீடற்ற பதினைந்து குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் என்பது எம் இனத்தை தூக்கி விடும் அரும் பணி.

இதுபோன்ற பணியை நாமே செய்வோமாயின் எங்களுக்கு எந்த நாடும் எந்த அரசும் உதவ வேண்டியதில்லை.

இந்த உலகில் வீழ்ந்த ஒரு இனம் தன் சக்தியால் எழுந்து கொண்டது என்று உலகம் போற்றும் அளவில் தமிழினம் வான்புகழ் பெறும்.

ஆகையால் நாமே நமக்கு துணை என்ற மகுட வாசகத்தோடு,

போரினால் பாதிக்கப்பட்ட எங்கள் இனத்தை– எங்கள் உறவுகளை கைகொடுத்து தூக்கி விடுவோம்.

அப்போது தெரியவரும் தமிழன் வீழ்ந்தது எழுவதற்காக என்று.

# பரிசளிப்பு விழாவில் பங்குபற்றும் சந்தர்ப்பம் மாணவர்களுக்குண்டு

## அதிபர் ஆணைக்குழுவில் உறுதியளிப்பு

பாடசாலையால் கௌரவிப்பு செய்யப்படாமல் மறுக்கப்பட்ட மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என கல்லூரி அதிபர் மனித உரிமை ஆணைக்குழுவில் உறுதியளித்துள்ளதாக மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற பாடசாலை மாணவர்களுக்கு கௌரவிப்பு செய்வதற்கு மறுத்ததாகவும் மாணவர்களின் உரிமை மீறப்பட்டதாக குறித்த மாணவர்களின் பெற்றோரால் யாழ் .மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த 20 ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

அதனடிப்படையில் பாடசாலையின் அதிபர், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்விப பணிப்பாளர் ஆகியோருக்கு இலங்கை மனித வுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தால் நேற்று முன்தினம் விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

குறித்த விசாரணையின் போது மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவில் பங்குபற்றும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என அதிபர் உறுதியளித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

மேற்படி பாடசாலையில், கடந்த 2015ஆம் ஆண்டு தரம் 5 இல் கல்வி கற்ற 2 மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதனையடுத்து தரம் 6க்கான கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்காக, அவ்விரண்டு மாணவர்களும் பருத்தித்துறையிலுள்ள கல்லூரியொன்றுக்குச் சென்றுள்ளனர்.

இதற்கிடையில்,புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் இன்றைய தினம் (25ஆம் திகதி) இடம் பெறவுள்ள நிலையில் கௌரவிப்பு வழங்கப்படவுள்ள மாணவர்களின் பட்டியலில், பாடசாலையை விட்டுச்சென்ற மாணவர்கள் இருவரது பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை அம்மாணவர்களின் பெற்றோருக்குத் தெரிய வந்துள்ளது.

குறித்தவிடயம் தொடர்பாக அதிபரை கேட்டபோது உரியபதில்வழங்காதகாரணத்தால் 2 மாணவர்களின் பெற்றோர்களும் இவ்வாறு முறைப்பாட்டை பதிவு செய்துள் ளனர். முறைப் பாட்டின் அடிப்படையில் இரு பகுதியினரும் விசாரணை செய்யப்பட்டு குறித்த வழக்கு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (இ-9)

# விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-08 அன்பின் நிலையான தன்மை

உலகே மாறினாலும் எதனாலும் என்றும் மாறாதது அன்பு. நம்மால் நேசிக்கப்படுகின்றவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ, நாம் நேசித்துக்கொண்டே இருப்பது என்பது சாத்தியம் தானா? நாம் அனைவரும் அறிந்த, புரிந்தும் புரியாத புதிராகிய ஒருவரால் அது முடியும்.

இறைவன் - அவர் ஒருவரிடமிருந்தே கால வரையறையற்ற காத்திருத்தலை எதிர்பார்க்க முடியும். பரம்பொருளின் அன்பு சாதாரண மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாத கள்ளம் கபடமில்லாத தாயன்பு. பன்றிக் குட்டிகளைப் போலச சீரழிந்து போய் விடுகின்ற ஆத்மாக்களின் துன்பகரமான அழுகுரலைக் கேட்டதும் அவர்களுக்கு ஞானப்பால் ஊட்டி, அறியாமை இருளை அகற்றுவதற்காக பன்றியின் அசுத்தத்திற்கு ஒப்பிடத்தக்க தூய்மையற்ற மனித சரீர உருவெடுத்து, தானே இப்புவியில் அவதரிக்கும் தாயன்பு அன்பே சிவமாகிய சிவபெருமானுடைய அன்பு.

இறைவனைப் பற்றி உலகெங்கும் பற்பல அபிப்பிராயங்கள். பற்பல நம்பிக்கைகள். அவர் எப்படிப்பட்டவரோ அப்படி அவரை நாம் புரிந்து கொள்ளா விட்டாலும் அதனைக் கண்டு கொள்ளாது, தொடர்ந்தும் நம்மை நேசிக்கக் கூடியவர் அவர். முழுமையாக நமக்கே நமக்காக நம்மை நேசிக்கக் கூடியவர் கடவுள். அவரது அன்பின் நிமித்தம் எவரும் வேதனைப்படுவதில்லை. மாறாத அன்பு என்ற சுபாவம் உடையவர்கள் இலகுவில் புறக்காரணிகளின் தாக்கத்திற்கு உள்ளாகுவதில்லை. இவர்கள், பிறருடைய ஆதிக்கங்களுக்கு உட்பட்டு அல்லது அன்புக்குரியவர்களின் எதிர்பாராத பிரதிபலிப்புகளின் வசப்பட்டு,.... தாம் நேசிப்பவர்கள் மீதான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். தமது முடிவிலே தெளிவாக இருப்பதோடு இலேசில் எவரிடமும் ஏமாந்து போகவும் மாட்டார்கள்.

“நீ யாராக இருந்தாலென்ன, எப்படிப்பட்டவனாக இருந்தாலென்ன, எத்தகைய பின்னணி உடையவனாக இருந்தாலென்ன இப்போதும் எப்போதும் நீ என்னுடையவன்” என்று நல்ல, நல்லதற்ற அனைத்து இயல்புகளுடனும் எத்தகையதொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் ஒருவரை மனமார ஏற்றுக் கொள்வது தூய அன்பு. ‘எங்கிருந்தாலும் எப்போதும் வாழ்க!’ என்று மனம், நிறைவடைந்து வாழ்த்தும்.

சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



பொறாமையையும் ஆணவத்தையும் விட்டுவிடு. பிறருக்காகக் கூடி உழைக்கக் கற்றுக்கொள். நமது நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுவே.

ஏதேனும் நன்மை வரவேண்டுமானால் உங்கள் கிரியைகளை எறிந்து விட்டு வாழும் தெய்வமாகிய மனிதவடிவ தெய்வத்தை, அதாவது மனித உருவம் கொண்ட ஒவ்வோர் உயிரையும் வழிப டுங்கள். பகவானைப் பிரபஞ்ச வடிவத்திலும் தனித்தனி வடிவத்திலும் வழிபடுங்கள்.

இரக்கத்தால் பிறருக்கு நன்மை செய்வது நல்லது. ஆனால் அவை இறைவனது அம்சமென எல்லா உயிர்களுக்கும் பணி செய்வது மிக நல்லது.

அமைதியாக மோனமாக ஒழுங்காக வேலை செய்தல் வேண்டும். பத்திரிகைப் பகட்டும், பெயர், புகழ்,ஆசையும் வேண்டாம். எப்போதும் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.


கொடுங்கோல் மன்னர்களே! கொடுங்கோன்மை ஒரு பக்கமானால் அடிமைத்தனம் மற்றொரு பக்கம் என்பதை நீங்கள் அறியவில்லை. அந்தோ! அடிமையும் கொடுங்கோன்மையும் ஒரே பொருள் கொண்ட சொல்களே.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ் **பிரதேசத்தில்** பிறவுண் வீதி, அரசடி வீதி, புகையிரதக் கடவையிலிருந்து தட்டா தெரு சந்திவரை, கே.கே. எஸ். வீதி நாச்சிமார் கோவிலிலிருந்து சிவன் கோவில் வரை, நாவலர் வீதியில் ஐந்து சந்தியிலிருந்து இலுப்பையடிச் சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் அரசடி சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதி சந்தி வரை, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து கே.கே.எஸ். வீதி வரை, அசாத் வீதி, வீ.ஏ. தம்பிலேன், பிரப்பங்குளம் வீதி, பொன்னப்பாவீதி, சிவலிங்கப்புளியடி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு வீதி, சிவன் பண்ணை வீதி, தாதி அபூபக்கர் வீதி, கம்பஸ் லேன், இராமநாதன் வீதி, புகையிரதக் கடவையிலிருந்து பரமேஸ்வரா சந்தி வரை, ஆதிசூடி வீதி, குமாரசுவாமி வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, நல்லூர் கோவிலடி, இராசாவின் தோட்டம், கைலாச பிள்ளையார் கோவிலடி, கோவில் வீதி, நாவலர் வீதி, ஆனைப்பந்தி சந்தியிலிருந்து பாப்பையா கடைச்சந்தி வரை, ஆஸ்பத்திரி வீதி மார்ட்டின் வீதி சந்தியிலிருந்து ஏ9 வரை, ஏ9 பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர் மடம் இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையிலிருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்ட்டின் வீதி, யாழ். 2.3. 4ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்டவீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திரவீதி, ஆஸ்பத்திரிவீதிவேம்படிச் சந்தியிலிருந்து மார்ட்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடைச்சந்திவரை, கஸ்தூரியார் வீதி யில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, தொழில் நுட்பக் கல்லூரி, பல்கலைக் கழகக் கல்லூரி, ஹரிகணன் அச்சகம், அண்ணா மலையான் ஸ்ரீராகவேந்திரா என்ரபிறைசஸ், SOS சிறுவர் பூங்கா, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், நாயன் மார் கட்டு Carlton Sports Network (CSN) யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ். மாவடடச் செயலாளர் அலுவலகம், வெனிசுலா புறபபர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிட்டெட் (துளசி மகால்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், றக்கா வீதி பிரிட்டிஷ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக் கொடை நிலையம், நெதேர்ண சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AV NOR பிறைவேற் லிமிடடட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** அறிவியல் நகர், MAS Active, யுனிச் செலா, பொறியியல் பீடம், விவ சாயபீடம், North Cargill's Agri foods ஆகிய பிரதேசங்களிலும் மன்னார் பிரதேசத்தில் சவேரியார்குளம் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வவுனியா வி.கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு போட்டி


## நகர் பிரதேச செயலகம் சம்பியன்























வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு விழா அண்மையில் புளியங்குளம் இந்து வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது

போட்டிகளில் ஒட்டு மொத்த புள்ளியடிப்படையில் வவுனியா நகர் பிரதேச செயலகம் முதலாமிடத்தினையும் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகம் இரண்டாமிடத்தையும் வவுனியா தெற்கு பிரதேச செயலகம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. இடம்பெற்ற போட்டிகளில்,

**பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

பி.துவாரகி -முதலாமிடம், ஆர்.சுபாஜினி- இரண்டாமிடம, எஸ்.சங்கவி- மூன்றாமிடம்.

**ஆண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

பி.சிவகுமார் -முதலாமிடம், ஆர்.தனுசன்- இரண்டாம், ஆர்.நிலவன்- மூன்றாமிடம்

**பெண்கள் 400 மீற்றர் ஓட்டம்**

R.M.P சுமனலி -முதலாமிடம், ஆர்.கர்சாளினி- இரண்டாம் எஸ். வனர்ஜா-மூன்றாமிடம

**ஆண்கள் 400 மீற்றர் ஓட்டம்**

ஆர்.தனுசன்-முதலாமிடம், எஸ்.தனுசன்-இரண்டாமிடம், ஏ.டினோஜன்-மூன்றாமிடம்

**பெண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

கே.கனகேஸ்வரி-முதலாமிடம், ஐ.மேரி கொண்சலா-இரண்டாமிடம், எஸ்-லுகப்பிரியா-மூன்றாமிடம்

**ஆண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

J.A.S.I. N. குமாரண-முதலாமிடம், எஸ்.தனுசன்-இரணடாமிடம், பி.சுமித் பிரசன்ன, கே.லக்சன்-மூன்றாமிடம்

**பெண்கள் 1500 மீற்றர் ஓட்டம்**

ஆர்.சாளினி-முதலாமிடம், கே.குகநேஸ்வரி-இரண்டாமிடம், ஐ.மேரிகொண்சலா-மூன்றாமிடம்

**ஆண்கள் 1500 மீற்றர் ஓட்டம்**

எம்.கௌரிநர்தன் -முதலாமிடம், எஸ்.தனுசன்- இரண்டாமிடம், எஸ்.டானியல்-மூன்றாமிடம்

**பெண்கள் 5000 மீற்றர் ஓட்டம்**

ஆர்.சாளினி-முதலாமிடம், ஐ.மேரிகொண்சலா - இரண்டாமிடம் A.A.S திசாநாயக-மூன்றாமிடம் .

**ஆண்கள் 5000 மீற்றர் ஓட்டம்**

கே.நவநீதன்-முதலாமிடம், H.A.P.D.I.திசாநாயகக- இரண்டாமிடம், எம். கௌரிநாதன-மூன்றாமிடம்.

**பெண்கள் 10000 மீற்றர் ஓட்டம்**

ஆர்.சாளினி -முதலாமிடம், A.M.S.அமசா-இரண்டாமிடம், எஸ்.பிரதீபா-மூன்றாமிடம் .

**ஆண்கள் 10000 மீற்றர் ஓட்டம்**

H.A.P.D.I.திசாநாயக-முதலாமிடம் எஸ்.தனுசன்-இரண்டாமிடம்,கே.தனுசியந்தன்-மூன்றாமிடம்

**பெண்கள் 100 மீற்றர் தடைதாண்டல் போட்டி**

பி.தர்சிகா -முதலாமிடம், ஐ.கனிஸ்ரா-இரண்டாமிடம்,

**ஆண்கள் 110 மீற்றர் தடை தாண்டல் போட்டி**

கே.கபிலன் -முதலாமிடம், வை. நிறோஜன்-இரண்டாமிடம், பி. தர்சன்-மூன்றாமிடம்

**பெண்கள் 400 மீற்றர்தடை தாண்டல் போட்டி**

பி.தர்சிகா-முதலாமிடம், ஐ.கனிஸ்ரா-இரண்டாமிடம்

**ஆண்களுக்கான 400 மீற்றர்தடை தாண்டல்போட்டி**

கே. குகநேஸ் வரன் - முதலாமிடம் கே.கபிலன்-இரண்டாமிடம்

**பெண்களுக்கான 4x100 மீற்றர் அஞ்சலோட்ட போட்டி**

வவுனியாநகர்பிரதேசெயலகம்-முதலாமிடம், வெங்கல செட்டிகுளம்பிர தேச செயலகம்-இரண்டாமிடம்

**ஆண்களுக்கான4x100 மீற்றர் அஞ்சலோட்ட போட்டி**

வவுனியா நகர் பிரதேச செய்லகம்-முதலாமிடம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம்- இரண்டாமிடம், வெங்கல செட்டிகுளம பிரதேச செயலகம்-மூன்றாமிடம் பெற்றுக கொண்டன.

**பெண்களுக்கான தட்டெறிதல் போட்டி**

ஆர்.தர்சிகா -முதலாமிடம், ஆர்.சுபோதினி-இரண்டாமிடம், ப.கிருஜா மூன்றாமிடம்

**ஆண்களுக்கான குண்டு போடுதல்**

சி.ஜேனோஜன்-முதலாமிடம், கே.முரளிதரன் - இரண்டாமிடம், ஜே.ரெஜிகரன்- மூன்றாமிடம்

**பெண்களுக்கான உயரம் பாய்தல்**

வை.சர்னிஜா-முதலாமிடம், ஆர்.சுபோதினி-இரண்டாமிடம்

**ஆண்களுக்கான உயரம் பாய்தல்**

ஆர்.நிரூபன்-முதலாமிடம், கே.கஜேந்திரன்-இரண்டாமிடம், பி.தர்சன்-மூன்றாமிடம்

**ஆண்களுக்கான 200 மீற்றர் போட்டி**

ஜே.தனுசன் -முதலாமிடம், எஸ்.சிபான்-இரண்டாமிடம், ஏ.டினோஜன்-மூன்றாமிடம்

**பெண்களுக்கான 200 மீற்றர்**

பி.தர்சிகா-முதலாமிடம், கே.துவாரகா -இரண்டாமிடம், ஜே.சுசினி-மூன்றமிடம் (சு-281)

## எவரெஸ்ட் வி.க. உதைபந்தாட்டம்

எவரெஸ்ட் வி.க.நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வரிசையில் 19.06.2016 (ஞாயிறு) நடைபெற்ற முதலாவது போட்டியில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் வருகைதராத காரணத்தால் அச்செழு வளர்மதிக்கு வெற்றி வழங்கப்பட்டது. அடுத்த போட்டியில் ஞானகலா வி. கழகத்தினை 1:0 என்ற ரீதியில் கில்லறி வெற்றி பெற்றுள்ளது. (சு)

## இன்றைய போட்டிகள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுதாச்சி சுற்றுப் போட்டி அரியாலை காந்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மின்னொளியில் நடைபெறும் போட்டியில் கைதடி வளர்மதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து இருபாலை விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகமும் இரவு 7.30மணியளவில் நடைபெறும் போட்டியில் பண்டத்தரிப்பு அறிவொளி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

+++

சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் றெயின்போ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ரேவடி விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

+++

ஜேபிஎல் வெற்றிக்கிண்ண 4வது பருவ காலத்திற்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 8மணிக்கு நடைபெறும் முதல் போட்டியில் சென் றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பற்றிசியன் விளையாட்டுக்கழகமும் 11 மணிக்குநடைபெறும் இரண்டாவது போட்டியில் K.C. C.C. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் பிற்பகல் 2மணிக்கு நடை பெறும் போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.(சு)

## ஞான முருகன் வெற்றி

எவரெஸ்ட் வி.க.நடத்தும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி வரிசையில் 21.06.2016 (செவ்வாய்) நடைபெற்ற முதலாவது போட்டியில் குறிஞ்சிக்குமரன் வி.கழகத்தை 2:1 என்ற கோல் ரீதியில் ஞானமுருகன் வெற்றி பெற்றது. அடுத்த சுற்றுக்கு தகுதி.2 ஆவது போட்டியில் பொம்மர்ஸ் வி.க.போட்டிக்கு வருகை தராத காரணத்தால் யங்ஹென்றீஸ் வி.கழகத்திற்கு வெற்றி வழங்கப் பட்டது. (சு)

# பாடசாலை வளாகத்தில் தனி மாணவருக்கு வகுப்புக்கள் எதுவும் நடத்தப்படக்கூடாது

## மீறினால் சட்ட நடவடிக்கை என முதலமைச்சர் உரை

(யாழ்ப்பாணம்)

தனி ஒரு மாணவனுக்கோ மாணவிக்கோ எக்காரணம் கொண்டும் பாடசாலை வளாகத்தினுள் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப் படக்கூடாது. அவ்வாறு வகுப்பு நடத்தப்பட்டால் குறித்த ஆசிரியர், அதிபர் மீது சட்ட ஒழுங்கின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

கல்வி நடவடிக்கைகளில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் பற்றி இறுக்கமான சில தீர்மானங்களை எடுக்கவேண்டிய கால கட்டாயத்திற்கு நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்/புற்றளை மகா வித்தியாலயத்தின் நூறாவது ஆண்டு நிறைவு விழா, புதிய நிர்வாகத் தொகுதி, திறந்த வெளி கலையரங்கம், நுழைவாயில் திறப்பு விழா மற்றும் நூற்றாண்டு மலர் வெளியீடும் தபால் தலை வெளியீடும் நேற்றைய தினம் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்து உரையாற்றுகையில்,

உலகளாவிய ரீதியில் இலங்கைத் தமிழர்கள் பொதுவாகக் கற்றவர்கள், பண்பட்டவர்கள், பண்புடையவர்கள் என்ற நற்பெயரை இதுவரை நிலைநாட்டி வந்துள்ளனர்.

எனினும் எவ்வளவு தீய பழக்கங்களையும் செயல்களையும் புரிய முடியுமோ அவற்றையெல்லாம் புரிந்து கொண்டு பூமிக்கு பாரமாக இருக்கக் கூடிய இளைஞர்களை நாம் இன்று எம்மிடையே பார்க்கின்றோம். இவர்களைத் திருத்தி சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய தலையாய பணி இப்போது புதிதாக உருப் பெற்றிருக்கின்றது.


போரால் பாதிக்கப்பட்ட மக்கள்,எவ்வாறு கரையேற்றுவது என்று திக்குத் தெரியாமல் நாம் தடுமாறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மாணவ மாணவியரைக் கரைசேர்க்கும் பிரச்சினை எம்மை மேலும் திணற வைத்துக் கொண்டிருக்கின்றது.

எளிமையிலும் செழிப்புடனும் வாழ்ந்த எம்மவர்கள் இன்று வெட்கித் தலைகுனிகின்றார்கள். பிரச்சினைகள் மாணவ மட்டத்தில் மட்டுமே என்று கூறமுடியாது. நாம் சிறுவர்களாக பாடசாலைகளில் கல்வி கற்ற காலத்தில எமது ஆசான்களாக எமக்குக் கல்வி புகட்டிய ஆசிரியப் பெருந்தகைகளை ஒரு கணம் எண்ணிப் பார்த்தோமானால் அவர்கள ஆசார சீலர்களாக, ஒழுக்கம் நிறைந்தவர்களாக, கண்ணியம் மிக்கவர்களாக, எமது முன்னேற்றத்தின் முன்னோடிகளாக வாழ்ந் ததை நாங்கள அடையாளம் காணுவோம். அவர்களின் தோற்றங்கள் இப்போதும் எமது மனக் கண்ணில் பசுமரத்தாணியாக காட்சி யளித்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இன்றைய தினசரிப் பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் எம்மை கதி கலங்க வைக்கின்றன. பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் குறிப்பாகப் பத்துப் பன்னிரண்டு வயது பெண் பிள்ளைகளுடைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எவ்வாறு பாடசாலைக்கு அனுப்புவது என ஏங்குகின்றார்கள்.

குருவைக் கண்ட இடமெல்லாம் வணங்கு என்ற ஒளவைப் பிராட்டியின் கூற்றுக்கு இன்று என்னாகி விட்டது? தகுதியற்றவர்கள் தகைமையற்றவர்கள் தரங்குறைந்தவர்கள் புனிதமான ஆசிரியத் தொழிலினுள் உள்ளிட நாம் இடமளித்து விட்டோம். இதற்குக் காரணம் அரசியல் என்பதிலும் பார்க்கச் சுயநலமே என்பது எனது கருத்து.

தூர நோக்கின்றி தருணத்திற்குப் பொருத்த மாக தன்நல காரணங்களுக்காக நாங்கள் தவறான பாதையில் சென்று விட்டோம் என்பதை இனியாவது நாம் உணர வேண்டும். எனவே கல்வி நடவடிக்கைகளில் ஆசிரியர்களின் செயற்பாடுகள் பற்றி இறுக்கமான சில தீர்மானங்களை கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் மூலம் அனுப்ப வேண்டிய கால கட்டாயத்திற்கு நாம் உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம் என்று நான் நம்புகின்றேன்.



உதாரணத்திற்குத் தனி ஒரு மாணவனுக்கோ மாணவிக்கோ மாலை நேர வகுப்புக்கள், விடுமுறை நாட்கள் வகுப்புக்கள் ஆகியன பாடசாலை வளாகத்தினுள் எக்காரணம் கொண்டும் நடத்தப்படக்கூடாது. அவ்வாறு நடத்தப்பட்டால் குறிப்பிட்ட ஆசிரியர், அதிபர் ஆகியோர் குற்றங்களைப் புரிந்தவர்களாகக் கருதப்பட்டு சட்ட ஒழுங்கின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படல்வேண்டும்.

மேலும் ஒரு ஆசிரியர் ஒழுக்க நெறி பிறழ்வில் ஈடுபட்டிருப்பது தெரிந்தும் அதனை உடனடியாக உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தாமல் மறைப்பதும் கூட தண்டனைக்கு உரிய குற்றமாகும். இவற்றை நடைமுறைப் படுத்த நாம் முன்வர வேண்டும்.

எனவே ஓர் இரு ஆசிரியர்களின் தவறான பழக்க வழக்கங்கள் ஒட்டு மொத்த ஆசிரியர் சமூகத்தையும் தலைகுனிய வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. நண்பர்கள், பழகியவர்கள் எனப் பிழை செய்பவர்களுக்கு உதவப் போய் நீங்களும் சேர்ந்து பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெரும்பான்மை ஆசிரியர்கள் கண்ணியத்துடன் நடந்து கொள்ள முடிவெடுத்தால் குற்றமிழைக்கும் ஆசிரியர்களை எளிதில் திருத்தி விடலாம்.

உங்கள் பெரும்பான்மையினரின் அழுத்தம் தவறு செய்பவரைக் கட்டுப்படுத்திவிடும். ஆனால் அதற்கென்ன என்று பெரும்பான்மையோர் சிந்திக்கத் தொடங்கினால் ஆசிரிய சமூகத்தைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும். கணணி மூலமாக எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவோம். ஆசிரியர்களுடன் நேரடித் தொடர்பின்றி கல்வி புகட்டுவோம் என்று பெற்றோர்கள் கூறத் தலைப்படுவார்கள்.

ஆகவே ஆசிரியர் சமூகம் மீண்டும் ஒரு உன்னதமான சமூகமாக மாற நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என இச் சந்தரப்பத்தில் கூறி வைக்கின்றேன்.

ஒவ்வொரு பாடசாலையும் ஏனைய பாடசாலைகளுக்கும் மக்களுக்கும் முன்மாதிரியாக விளங்க இனிப் பாடுபடவேண்டும். அவை பாடசாலைகளாக இல்லாது கோவில்களாக மாற நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். கோவில்களாகத் தினமும் பூஜிக்கத்தக்க வகையில் பாடசாலைகள் மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்கு நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பதவி விலகுகிறார்...

அடுத்து, அந்நாட்டின் பிரதமர் டேவிட் கமரூன் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேற வேண்டுமா, இல்லையா என்பதை தீர்மானிக்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

இந்த கருத்தறியும் வாக்கெடுப்பில் 52 சதவீதமானோர் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இந்நிலையில், இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போது, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் இருந்து பிரதமர் பதவியிலிருந்து தான் விலகப் போவதாக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும் இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் போது டேவிட கமரூன் பரப்புரைகளை மேற்கொண்டு வந்திருந்தார்.

அத்துடன், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகினால், அதற்கு பொருளாதார மற்றும் பாதுகாப்பு விளைவுகள் இருக்கும் என்றும் இதன்போது அவர் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## நாளை மறுதினம்...

மறுதினம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நல்லூர் ஆலய முன்றலில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை வட மாகாண காணாமல் ஆக்கப்பட்ட குடும்ப உறவுகளின் சங்கம், மயிலிட்டிமீள் குடியேற்ற குழு, மயிலிட்டி கடற் தொழிலாளர் கூட்டுறவுச சங்கம்,வலி வடக்கு மீள்குடியேற்றம் புனர் வாழ்வு சங்கம், வலி.வடக்கு நலன்புரி நிலையங்களின் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து மேலும் பல சமூக அமைப்புக்கள் முன்னெடுக்கவுள்ளன.

நல்லூர் ஆலய முன்றலின் அணி திரண்டு அமைதி ஊர்வலமாக புறப்பட்டு கோவில் வீதியில் அமைந்துள்ள யூ.என்.எச்.சி.ஆர் அலுவலகத்தில் அவர்கள் மகஜர் ஒன்றை கையளிக்கவுள்ளனர். இதேவேளை இந்த மாபெரும் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும்படி ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (செ-9)

## போலி நாணயத்தாள்...

வங்கி ஒன்றில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் திருமணத்திற்காக அடைவு வைத்து நாலுஇலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பணம் பெறப்பட்டதாகவும் அதில் இரண்டு இலட்சம் ரூபாய் போலி நாணயத் தாள்கள் இருந்ததாக பொலிஸாரிடம் முறையிட்டிருந்தார்.

இது தொடர்பில் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுவந்த இளவாலைப் பொலிஸார் முறைப்பாட்டினை பதிவு செய்த 24 வயதுடைய பெண்ணே போலி நாணயத் தாள்களை வைத்ததை கண்டறிந்ததனை அடுத்து அதனை வடிவமைத்து கொடுத்த சுன்னாகம் பகுதியை சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவரையும், அதனை அச்சடித்து கொடுத்த யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல அச்சகம் ஒன்றின் உரிமையாளரான 45 வயதுடைய நபரினையும் இளவாலைப் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்ததுடன் போலி நாணயத் தாள்களை அச்சிட பயன்படுத்தப்பட்ட உபகரணங்களினையும் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர். (செ-60)

## பொது எதிரணியினர்...

மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டது.

மத்திய வங்கியின் ஆளுநருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வற் வரி அதிகரித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று கோரியும் லேக் ஹவுஸ் சந்திக்கு அருகில் நேற்று மதியம் இந்தப் பேரணி ஆரம்பமானது.

இந்த எதிர்ப்பு பேரணியில் கறுப்புப் பட்டி அணிந்து பாராளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, விமல வீரவன்ஸ,வாசுதேவ நாணயகார, மகிந்தானந்த அளுத்கம மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களென ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்த பேரணியில், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன்,நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் நல்லாட்சி அரசாங்கத்திற்கெதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டு, லேக் ஹவுஸ சந்தியில் இருந்து நிதி அமைச்சு வரை ஆர்ப்பாட்டக்காரர்கள் பேரணியாகச் சென்றனர்.

பேரணி மத்திய வங்கி வளாகத்திற்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன நேற்றுக் காலை தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அத்துடன், இவர்கள் நிதி அமைச்சு வளாகத்திற்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் உலக வர்த்தக மத்திய நிலையத்திற்கு முன்பாக பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி இருந்தனர்.

இதன்போது ஏற்பட்ட நெரிசலில் வீதித் தடையில் மோதுண்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரோகித அபேகுணவர்தன மற்றும் சிறியானி விஜயவிக்ரம ஆகியோர் காயமடைந்தனர்.

ரோகித அபேகுணவர்தன கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டதுடன் சிறியானி விஜயவிக்ரம தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவத்தின் பின்னரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், நிதி அமைச்சின் வளாகத்திற்குள்ளும் பிரவேசித்தனர். அதன் பின்னர் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான சிறியானி விஜயவிக்ரம மற்றும் ரோகித அபேகுணவர்த்தன சுகநலம் விசாரிப்பதற்காக நேற்று பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில் அவர் படுகாய மடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் கோப்பாய் வைத்தியசாலைக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இதில் இணுவில் மேற்கினை சேர்ந்த ஆனந்தராசா சயந்தன் (வயது 24) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். (செ-30)

## ஐரோப்பிய...

மான மக்கள் வாக்களித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பில் 52 சதவீதமானோர் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவாக வாக்களித்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறுவது உறுதியாகியுள்ளது.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து இருக்க வேண்டுமாயின் அதற்கு ஆதரவாக இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பில் 16.5 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா நீடிக்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக லண்டன் மற்றும் ஸ்கொட்லாந்து ஆகிய நகரங்களில் அதிகளவு மக்கள் வாக்களித்திருந்த போதிலும்; நாட்டின் பிற பகுதிகளில் பெரும்பான்மையான இடங்களில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற தரப்புக்கே ஆதரவு கிடைத்துள்ளது.

இதனிடையே, பிரித்தானியாவில் இடம்பெற்ற இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் தலைவர்கள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்தக் கருத்தறியும் வாக்கெடுப்பின் முடிவுகள் வெளியான நிலையில் அதன் நாணயமான, பவுண்ஸின் மதிப்பு கடந்த 30 ஆண்டுகளில் காணாத பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா தொடர்ந்து இருக்க வேண்டும் என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விருப்பம் வெளியிட்டிருந்ததுடன், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் வேண்டுகோளை ஏற்று நான்கு இலங்கை அமைச்சர்கள் லண்டன் சென்று பரப்புரைகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 'அரசாங்கத்தை...

மக்கள் மத்தியில் பொய் வதந்திகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சதி நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இந்த சதித்திட்டங்களுக்குள் கடந்த அரசாங்கத்தில் இராணுவத்துக்குள் இருந்து பாஸிசவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் இருக்கின்றனர். அவர்கள்தான் அரசாங்கத்துக்கு எதிரான சதி நடவடிக்கைகளுக்கு மறைந்திருந்து துணைபோகின்றனர்.

அத்துடன் கொஸ்கம சாலாவ இராணுவ ஆயுத களஞ்சியசாலை வெடிப்புக்கான காரணம் இதுவரை வெளிப்படவில்லை. இந்த சம்பவமும் சதி நடவடிக்கையாகவே இருக்கவேண்டும். இது அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயலாகவே இருக்க வேண்டும் என்ற சந்தேகமும் தோன்றுகின்றது என அவர் தெரிவித்தார். (செ-12)

## சொகுசு வாகன...

பட்ட அனுமதி பத்திரங்களை வழங்குவதன் மூலம் நாட்டுக்கு சுமார் 1,000 மில்லியன் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்படுவதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் நாகானந்த கொடிதுவக்கு குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன், பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இத்தகைய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்று வழக்கறிஞர் நாகானந்த கொடிதுவக்கு குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே இந்த வாகன அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை இரத்துச் செய்ய வேண்டும் என உத்தரவு பிறப்பிக்குமாறு தனது மனு மூலம் வழக்கறிஞர் நாகானந்த கொடிதுவக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரச அதிகாரிகள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னதாக அமைச்சர்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக 118 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 9ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## தகவல் அறியும்...

இதனையடுத்து தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் நாடாளுமன்றில் நேற்று வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (செ-12)

# அவன் கார்ட் கப்பலின் உக்ரைன் தலைவர் கைது

காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள அவன் கார்ட் நிறுவனத்துக்கு சொந்தமான ஆயுதக் கப்பலின் தலைவரான உக்ரைன் நாட்டு பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று மாலை அவர் கைது செய்யப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

சட்டவிரோத ஆயுத விநியோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் காலி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் (செ-10)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-5016)




Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.

As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.

Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.

Lecturer in Business Management

✓ Should have a Masters / bachelors in relevant field
✓ Should have excellent presentation skills
✓ Having experience in conducting lectures will be an added advantage
✓ Should be able to work on week ends

Lecturer / Assistant Lecturer - English

✓ Should have a either a bachelors degree or be a 2nd year student of a degree in the relevant field
✓ Should have excellent presentation skills
✓ Having experience in conducting lectures will be an added advantage
✓ Should be able to work on week ends

Business Development Executive

✓ Plan and Prioritize marketing activities in order to achieve set targets
✓ You will have an incentive rewards scheme in addition to your salary
✓ Maintain strong customer relationships
✓ Assisting in identifying new methods and opportunities for Marketing Campaigns
✓ Research and Build relationships with new potential customers
✓ Educational Qualifications in Marketing is not sorted however having prior experience in marketing and Business Development will be an added advantage.

Customer Relations Officer - Jaffna & Kilinochchi

✓ Guiding student on the proper path by handling queries and questions
✓ Handling student registration
✓ Fluency in English and Computer Literacy
✓ Prior experience in similar positions, Customer care and front office operations will be advantageous.

How to Apply

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself to Jaffna@esoft.lk Please state the position applied as the subject line of the email

(சி-5015)

Manager Human Resources
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka.
Contact - 077 309 9 308 Web: www.esoft.lk Email: jaffna@esoft.lk

DEUTSCH வகுப்புக்கள்

மாலுசந்தி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி கிளிநொச்சி ஆகிய இடங்களில் கற்பிக்கப்படும்.

தொடர்புக்கு : T. நந்தன்
077 078 2022
(சி-5014)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடனான வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
(சி-5019)

வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798

275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அசைவ ஹோட்டலொன்றுக்கு சமையலாளர், றைஸ் தயாரிப்பாளர், உதவியாளர் உடனடியாகத் தேவை.

தொடர்புகளுக்கு :-
077 125 8072

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

காணிகள் விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு அம்மன் வீதியில் நில.பர 5 உம் குளி 9.59 காணி வீட்டுடனும், பலாலி வீதி திருநெல்வேலியில் நில. பர 12 உடையதுமான காணியும் விற்பனைக்குண்டு.

(துண்டுகளாக விற்பனைக்குண்டு)

தொடர்புகளுக்கு :-
0777 286 061
0771 671 174

V2 TRAVELS குறைந்த கட்டணத்தில் அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் / வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை



• விமான ஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)
• விசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)
• இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services)
• பயண திகதியினை மாற்றுதல் (Date change)
• பயணக்காப்புறுதி (Travel Insurance)

UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான Visit visa/Spouse Visa/Tourist visa/Student visa/ Business visa போன்றவற்றிற்கான ஆலோசனைகள், ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்ட (REFUSAL) விசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்து VISA பெற்றுக்கொடுத்தல்

ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் எமது அனைத்து கிளைகளும் இயங்கும்

குறைந்த கட்டணத்தில் விரைவான சேவை.
மீண்டும் மீண்டும் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கு விசேட விலை சலுகைகள்

உங்கள் வீட்டிலிருந்து உங்கள் உறவுகளின் வீட்டிற்கு
■ மேலதிக கட்டணமின்றி உங்கள் இடங்களிலேயே வந்து பொதிகளை பெற்றுக்கொள்கிறோம். இதன்மூலம் வாடிக்கையாளர் போக்குவரத்துச் செலவையும் வீண் அலைச்சலையும் தவிர்த்துக்கொள்ளலாம்
■ வாரத்தில் 7 நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் மாலை 7 மணிவரைக்கும் உங்கள் வீடுகளில் வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.
■ 3-7 வேலை நாட்களில் உலகில் எந்தநாட்டிலும் பொதிகள் தாமதமின்றி ஒப்படைக்கப்படும்.



எமது கிளைகள் →
யாழ்ப்பாணம் 49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
கிளிநொச்சி A9 வீதி, கிளிநொச்சி (பழைய ஆஸ்பத்திரிக்கு முன்னால்)
நெல்லியடி முடக்காட்டு சந்தி, நெல்லியடி.
வல்வெட்டித்துறை யாழ் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

0768226243
முகவர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்

(சி-5011)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.